Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ

தொகுதி
2

வருடாந்திர
சந்தா
ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly
**BADAR** Qadian
TAMIL

இதழ்
6

ஆசிரியர்
முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர்
ரஃபீக் அஹ்மது

11 ஜமாதியுல் அவ்வல் 1438 ஹிஜ்ரி கமரி 9 தப்லீக் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி
9 பிப்ரவரி 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**மர்யமின் மகன் ஈஸா எனது காலத்தில் இருந்திருந்தால் என்னால் செய்ய முடிந்த பணிகளை ஒருபோதும் அவரால் செய்ய முடியாது. என் மூலமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்த அடையாளங்களை ஒருபோதும் அவரால் காட்ட முடியாது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

எவனது கையில் எனது உயிர் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது நான் ஆணையிட்டுக் கூறுகின்றேன். மர்யமின் மகன் ஈஸா எனது காலத்தில் இருந்திருந்தால் என்னால் செய்ய முடிந்த பணிகளை ஒருபோதும் அவரால் செய்ய முடியாது. என் மூலமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்த அடையாளங்களை ஒருபோதும் அவரால் காட்ட முடியாது. மேலும் இறைவனின் அருள் தன் மீது இருப்பதை விட அதிகமாக என் மீது இருப்பதை அவர் காண்பார். நான் இப்படிப்பட்டவனாக இருக்கும்போது எந்த தூதர் (ஸல்) அவர்களின் அடியானாக இருப்பதுடன் நான் தொடர்புபடுத்திக் கூறப்படு -கின்றேனோ அந்த தூய தூதர் (ஸல்) அவர்களின் அந்தஸ்து எத்தகையது என்பதை இப்போது சிந்தனை செய்யுங்கள். ذَالِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ (இது அல்லாஹ்வின் அருளாகும். தான் நாடியவர்களுக்கு இதனை அவன் வழங்குகின்றான்.) இந்த இடத்தில் பொறாமைப்படுவதாலோ பெருமை கொள்வதாலோ எதுவும் நடக்காது. இறைவன் தான் விரும்பியதை செய்கின்றான். அவனது எண்ணத்தை எதிர்த்து நிற்பவர் தனது குறிக்கோள்களில் தோல்வி அடைவது மட்டுமல்லாமல் தனக்கென்று நரகத்தின் வழியைப் பெற்றுக் கொள்கின்றார். பலவீனமான படைப்பினத்தை இறைவனாக ஆக்கியவர்கள் அழிந்து விட்டனர். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தூதரை ஏற்றுக் கொள்ளாத -வர்களும் அழிந்து விட்டனர். என்னை அடையாளங்கண்டு கொண்டவர்கள் அருளுக்குரியவர்கள். நான் இறைவனின் எல்லா வழிகளிலும் இறுதி வழியாக இருக்கின்றேன். நான் அவனது எல்லா ஒளிகளிலும் இறுதி ஒளியாவேன். என்னை விட்டு விடுபவர் துர்பாக்கியசாலியாவார். ஏனென்றால், நான் இல்லாமல் அனைத்துமே இருளாகும். (கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 60)

## காதியான் நடைபெற்ற 122 -வது ஆண்டு மாநாடு தொடர்பாக சுருக்கமான அறிக்கை

*(சென்ற இதழின் தொடர்ச்சி...*

**இரண்டாவது நாள் - இரண்டாவது அமர்வு**

இரண்டாவது நாளின் இரண்டாவது அமர்வு ளுஹர் அஸர் தொழுகைகளுக்குப் பிறகு வகீலுல் அ:்லா தஹ்ரீகே ஜதீத் ஆன மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது ஹா:்பிஸாபாதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானின் மாணவரான மதிப்பிற்குரிய :்பஸ்லே உமர் :்பாருக் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். அவர்கள் சூரா அல் ஹுஜுராத்தின் 12 முதல் 18 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். இந்த வசனங்களுக்கான மொழியாக்கத்தை கூடுதல் நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத் த:்லீமுல் குர்ஆன் வக்:்பே ஆர்ஸி அவர்கள் படித்துக் காட்டினார்கள். இதற்குப் பிறகு மதிப்பிற்குரிய முர்ஷிது அஹ்மது டார் சாஹிப் அவர்களும் அவர்களது நண்பர்களும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் கவிதையை அழகிய குரலில் பாடினார்கள். அதற்குப் பிறகு தலைமையக துணை நாஸிர் த:்வத்தே இலல்லாஹ்வான மதிப்பிற்குரிய கியானி தன்வீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சமாதானத் தூது என்ற நூலின் ஒளியில் “மார்க்கத் தோற்றுனர்களுக்கு மதிப்பளிப்பது உலக அமைதிக்கான உத்திரவாதமாகும்” என்ற தலைப்பில் பஞ்சாபி மொழியில் சொற்பொழி -வாற்றினார்கள்.

தஷஹ்ஹுது தஅவ்வுஸ் மற்றும் பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம் ஆகியவற்றை ஓதிய பிறகு அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இன்று உலகில் ஒரு மிகப்பெரிய நோக்கத்திற்காக படைக்கப்பட்ட மனிதன் அழிவின் குழியில் விழுவதற்கு தயாராக இருக்கின்றான். எல்லா புறமும் அமைதியின்மை மற்றும் அச்சத்தின் சுற்றுச்சூழல் இருந்து வருகின்றது. உலகம் மூன்றாவது உலகப் போரை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது. இந்த போர் நடந்தால் அதன் அபாயகரமான நிழல் பல நூற்றாண்டுகள் வரை மனிதனை பின்தொடர்ந்து கொண்டே இருக்கும். இந்த அமைதியின்மை மற்றும் போருக்கான காரணங்கள் என்ன? மேலும் எந்தக் காரணிகள் மூலமாக இந்த அழிவிலிருந்து நாம் தப்பிக்க முடியும்? மார்க்கத் தலைவர்கள் மார்க்கத்தை அரசியல் பலன்களைப் பெறுவதற்கான வழியாக ஆக்கிக் கொண்டது இந்த அமைதி -யின்மைக்கான ஒரு காரணமாக இருக்கின்றது. கண்ணியத்திற்குரிய மார்க்கத் தலைவர்கள் மீதும் புனித வேதங்கள் மீதும் அசுத்தமான ஆட்சேபனைகள் செய்யப்படுகின்றன. அதன் காரணமாக பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர் -களுக்கு மத்தியில் அமைதியின்மை நிலவுகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் இறைவனின் தூதர்கள் வந்தனர் என்று திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான். எந்தவொரு மதமும் உரிமையின்றி எவர் மீதும் அநீதியிழைப்பதற்கான போதனையை வழங்கவில்லை. ஒவ்வொரு மதமும் அமைதி, அன்பு, சகோதரத்துவம், பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது அன்பு நேசம் கொள்வது ஆகிய விஷயங் -களையே போதிக்கின்றது.

தொடர்ந்து அவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத் ஒவ்வொரு மதத்தின் தோற்றுனருக்கும் கண்ணிய -மளிக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒவ்வொரு மதத்தின் தலைவருக்கும், புனித வேதங்களுக்கும் உண்மை -யான கண்ணியத்தை வழங்கியுள்ளார்கள். தனது ஜமாஅத்திற்கும் இதைப் பற்றி போதித்துள்ளார்கள். இன்று அமைதியை நிலைநாட்டுவதற்கு ஒரேயொரு வழிதான் இருக்கின்றது. அந்த வழி இஸ்லாம் கூறுகின்ற அமைதியை வழங்குகின்ற போதனை -களின்படி செயல்படுவதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் மறைவிற்குப் பிறகு அவர்களது கலீ:்பாக்கள் அமைதியை நிலை நாட்டுவதற்கான முயற்சிகளை தொடர்ந்து செய்து வந்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீ:்பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1928 ஆம் ஆண்டில் மார்க்கத் தோற்றுனர்களின் மாநாட்டிற்கான ஏற்பாட்டைச் செய்யுமாறு கட்டளையிட்டார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த மாநாடுகள் மூலம் இஸ்லாத்தைப் பற்றிய எல்லா சந்தேகங்களையும் அகற்றி இஸ்லாத்தின் உண்மையான முகத்தை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றது. இன்று முழு உலகமும் பதற்றத்திற்கு இரையாகியிருக் -கின்றது. மேலும் இவையெல்லாம் மார்க்கத்தின் பெயரால் நடக்கின்றது. ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ:்பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லா ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் முழு உலகிலும் அமைதியை நிலைநாட்டு -வதற்காக முயற்சிகளைச் செய்து கொண்டிருக் -கின்றார்கள். உலகிலுள்ள பெரும் பெரும் நாடுகளின் பாராளுமன்றங்களுக்குச் சென்று வரவிருக்கின்ற பயங்கரமான ஆபத்துகள் குறித்து அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

*(தொடரும்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இன்று உலகில் ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு குறிக்கோளை அடைவதற்காக ஒரே கையின் கீழ் ஒன்று திரண்டு தனது செல்வத்தைச் செலவு செய்தவாறு தியாகம் செய்கின்ற எந்தவொரு பிரிவையும் எந்தவொரு ஜமாஅத்தையும் நாம் பார்க்க முடியவில்லை. அதன் நோக்கமும் கூட மார்க்கத்தைப் பரப்புவதாகவும் படைப்பினங்களுக்குத் தொண்டு செய்வதாகவும் இருக்கின்றது. எனினும், இத்தகைய ஒரேயொரு ஜமாஅத் மட்டும் இருக்கின்றது. அது இந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கின்றது. அது இந்த நோக்கத்தை அடைவதற்காக இறைவனால் நிறுவப்பட்ட ஜமாஅத் ஆகும். அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் ஜமாஅத் ஆகும். அது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் ஜமாஅத் ஆகும். இஸ்லாத்தை முழு உலகிலும் நிலைநாட்டுவதற்கான பணி அந்த ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அது கடந்த 128 வருடங்களாக இஸ்லாத்திற்கு தொண்டாற்றுவதற்காகவும் மனித இனத்திற்கு தொண்டாற்றுவதற்காகவும் தனது செல்வத்தைச் செலவு செய்து வருகின்றது. இதற்கான காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த ஜமாஅத்திற்கு திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியில் செல்வத்தைச் சரியாக செலவு செய்வது பற்றிய அறிவையும் அதை தியாகம் செய்வதைப் பற்றிய அறிவையும் வழங்கியுள்ளார்கள்.

பலரது நல்லுதாரணங்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது நூல்களிலும் மல்ஃபூஸாத்திலும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அவர்கள் தங்களது தேவைகளைப் பொருட்படுத்தாமல் மார்க்க நோக்கங்களுக்காக அதிகமாக தியாகங்களைச் செய்துள்ளனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஜமாஅத்தைச் சார்ந்த நபர்களுக்கு இந்த தியாகங்களின் உணர்வு எந்த அளவு ஏற்பட்டதென்றால், ஒரு தலைமுறைக்குப் பிறகு அடுத்த தலைமுறை தியாகங்கள் செய்து கொண்டே செல்கின்றனர். இன்னும் சொல்வதென்றால், தொலை தூர நாடுகளில் வசிக்கின்ற மக்கள் கூட அவர்கள் பிறகு வந்து ஜமாஅத்தில் இணைந்தாலும் கூட (இப்போதும் இணைந்து கொண்டிருக்கின்றனர்) அவர்களும் இந்த சான்றோர்கள் செய்த தியாகங்கள் தொடர்பான விஷயங்களைக் கேட்கும்போது அல்லது இந்த நோக்கத்திற்காக தியாகம் செய்ய வேண்டிய தேவை உள்ளது என்பதை கேள்விப்படும்போது, அல்லாஹ்வின் வார்த்தைகளைக் கேட்டு பிறகு தியாகத்தின் ஆன்மாவை அவர்கள் புரிந்து கொள்ளும்போது அவர்களும் கூட தியாகங்களின் எத்தகைய நல்லுதாரணங்களை நிலைநாட்டியுள்ளனர் என்றால், அதைப் பார்த்து வியப்பாக இருக்கின்றது.

---

உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள அஹ்மதிகளின் பொருள் தியாகங்கள் தொடர்பாகவும் காலத்தின் கலீஃபாவின் குரலுக்கு செவி சாய்த்தது தொடர்பாகவும் மிகவும் ஒளிமயமான பின்பற்றத் தகுந்த நல்லுதாரணங்களை ஆன்மாவிற்கு எழுச்சியூட்டும் வகையில் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

## வக்ஃபே ஜதீதின் 60 -வது வருடம் தொடங்கியுள்ளதற்கான அறிவிப்பு

கடந்த வருடத்தில் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திலுள்ள நபர்கள் வக்ஃபே ஜதீதிற்காக 80 இலட்சத்து 20 ஆயிரம் பவுண்டுகளைத் தியாகம் செய்துள்ளனர். இந்த வருடமும் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பாகிஸ்தான் பட்டியலில் முதலிடத்தை வகிக்கின்றது.

பல்வேறு நாடுகள் வக்ஃபே ஜதீதில் பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் செய்த தியாகங்கள் பற்றிய ஆய்வறிக்கையையும் இத்திட்டத்திற்காக அதிகமாக தியாகம் செய்துள்ள நாடுகள் மற்றும் ஜமாஅத்துகளைப் பற்றியும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

வக்ஃபே ஜதீதில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும் என்று ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். கடந்த வருடத்தை விட பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையில் எந்தெந்த நாடுகளில் குறைவு ஏற்பட்டுள்ளதோ அவர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தமது பலவீனங்களை அவர்கள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். மக்களிடம் பலவீனம் இல்லை. பணி செய்பவர்களிடம் பலவீனம் இருக்கின்றது என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

---

மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதா மிர்ஸா கலீல் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய அஸ்மா தாஹிரா சாஹிபா அவர்களும், லாஹூர் மாவட்டத்தின் முன்னாள் அமீரும் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனின் தலைவருமான மதிப்பிற்குரிய சவுத்ரி ஹமீது நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் அவர்களும் வஃபாத் ஆகி விட்டனர். மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவர்களுக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 6 ஜனவரி 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **6 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ . الرَّحْمٰنِ الرَّحِيْمِ . مٰلِكِ يَوْمِ الدِّيْنِ . اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ .

உலகில் மனிதன் செல்வத்தைச் செலவு செய்கின்றான். அவன் தனது நிம்மதிக்காகவும், தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும் அவன் அதை செலவு செய்கின்றான். சில நேரங்களில் அதிலிருந்து அவன் தான தருமங்களைச் செய்கின்றான். ஸதகா கொடுக்கின்றான். ஆனால், இன்று உலகில் ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு குறிக்கோளை அடைவதற்காக ஒரே கையின் கீழ் ஒன்று திரண்டு தனது செல்வத்தைச் செலவு செய்தவாறு தியாகம் செய்கின்ற எந்தவொரு பிரிவையும் எந்தவொரு ஜமாஅத்தையும் நாம் பார்க்க முடியவில்லை. அதன் நோக்கமும் கூட மார்க்கத்தைப் பரப்புவதாகவும் படைப்பினங்களுக்குத் தொண்டு செய்வதாகவும் இருக்கின்றது. எனினும், இத்தகைய ஒரேயொரு ஜமாஅத் மட்டும் இருக்கின்றது. அது இந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கின்றது. அது இந்த நோக்கத்தை அடைவதற்காக இறைவனால் நிறுவப்பட்ட ஜமாஅத் ஆகும். அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் ஜமாஅத் ஆகும். அது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் ஜமாஅத் ஆகும். இஸ்லாத்தை முழு உலகிலும் நிலைநாட்டுவதற்கான பணி அந்த ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அது கடந்த 128 வருடங்களாக இஸ்லாத்திற்கு தொண்டாற்றுவதற்காகவும் மனித இனத்திற்கு தொண்டாற்றுவதற்காகவும் தனது செல்வத்தைச் செலவு செய்து வருகின்றது. இதற்கான காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த ஜமாஅத்திற்கு திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியில் செல்வத்தைச் சரியாக செலவு செய்வது பற்றிய அறிவையும் அதை தியாகம் செய்வதைப் பற்றிய அறிவையும் வழங்கியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: "நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றேன். அதாவது, நீங்கள் இறைவனின் வழியில் செலவு செய்யுங்கள். இது இறை கட்டளையின் அடிப்படையிலேயே கூறப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், இஸ்லாம் இப்போது வீழ்ச்சியின் நிலையில் இருக்கின்றது. வெளிப்புற மற்றும் உட்புற பலவீனங்களைப் பார்த்து இயல்பு நிம்மதியிழந்து விட்டது. இஸ்லாம் அதனை எதிர்க்கின்ற ஏனைய மதங்களின் இரையாக ஆகிக் கொண்டிருக்கின்றது."

தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்: "இத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்ட பிறகு இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக நாம் எதுவும் செய்யாமல் இருந்து விட முடியுமா? இறைவன் இந்த நோக்கத்திற்காகவே இந்த இயக்கத்தை நிறுவியுள்ளான். எனவே, இதன் முன்னேற்றத்திற்காக முயற்சி செய்வது அல்லாஹ்வின் கட்டளையையும் அவனது விருப்பத்தையும் நிறைவேற்றுவதாகும்."

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 393-394)

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "இதைப் பற்றிய வாக்குறுதியும் அல்லாஹ்விடமிருந்தே கிடைத்திக்கின்றது. அதாவது, எவர் இறைவனுக்காக

வழங்குவாரோ அவருக்கு நான் பல மடங்கு அதிகமான பரக்கத்தை வழங்குவேன் என்பது அவனது வாக்குறுதியாகும். உலகிலேயே அவருக்கு மிகவும் அதிகமாக அவை கிடைக்கும். மரணத்திற்குப் பிறகு மறுமையில் கிடைக்கின்ற நற்கூலியையும் அவர் பார்ப்பார். எந்த அளவு நிம்மதி அவருக்கு கிடைத்துள்ளது என்பதை அவர் காண்பார். சுருக்கமாக, இந்த வேளையில் நான் இந்த விஷயத்தின் பக்கம் உங்கள் எல்லாருக்கும் கவனமூட்டுகின்றேன். அதாவது, இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக நீங்கள் உங்கள் செல்வங்களைச் செலவு செய்யுங்கள்.''

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 393-394)

ஹுஸூர் (அலை) அவர்களின் சஹாபாக்கள் இந்த விஷயத்தைப் புரிந்து கொண்டார்கள். அவர்கள் தமது செல்வத்தை மார்க்க நோக்கங்களுக்காக அர்ப்பணித்தனர். அதைப் பற்றி பல சந்தர்ப்பங்களில் ஹுஸூர் (அலை) அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். அதாவது, அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் பொருள் தியாகத்தில் எந்த அளவு முன்னேறிச் செல்பவர்களாக இருந்தார்கள் என்பதைப் பற்றி அன்னார் கூறியுள்ளார்கள். உதாரணமாக, மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்காக பொருள் தியாகம் செய்யுமாறு கூறப்பட்ட வேளையிலும், பிரசுரங்களை வெளியிடுவதற்காகவும் மற்றும் ஏனைய பல நோக்கங்களுக்காகவும் அன்னார் பொருள் தியாகம் செய்யுமாறு வேண்டியபோது சஹாபாக்கள் தியாகங்கள் செய்தனர். மினாரத்துல் மஸீஹிற்காக பொருள் தியாகம் செய்யுமாறு அன்னார் கூறியபோது நிலத்தை அளப்பவராக பணிபுரிந்த முன்ஷி அப்துல் அஸீஸ் சாஹிப் அவர்கள் செய்த பொருள் தியாகத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு பொருள் தியாகம் செய்த இரண்டு நபர்களைப் பற்றி குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள். அவர்களுள் ஒருவர் முன்ஷி அப்துல் அஸீஸ் சாஹிப் அவர்கள் ஆவார்கள். இன்னொருவர் ஷாதி கான் சாஹிப் ஆவார்கள்.

இவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: "எனது ஜமாஅத்தைச் சார்ந்த கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட இரண்டு நபர்கள் இந்தப் பணிக்காக சந்தா கொடுத்துள்ளார்கள். இது உண்மையில் மற்ற சகோதரர்களுக்கு பொறாமை கொள்ளத்தக்க ஒரு விஷயமாகும். இவர்களில் ஒருவரது பெயர் முன்ஷி அப்துல் அஸீஸ் ஆகும். இவர் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் நிலத்தை அளப்பவராக பணிபுரிந்து வருகின்றார். குறைந்த வருமானம் இருந்தும் கூட இவர்கள் இந்தப் பணிக்காக நூறு ரூபாய் சந்தா கொடுத்துள்ளார்கள். இந்த நூறு ரூபாய் பல வருடங்களாக அவர்கள் ஒன்று திரட்டிய செல்வமாகும் என்று நான் கருதுகின்றேன்.''

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "இவர் புகழ்வதற்கு தகுதி உள்ளவராக இருப்பதற்கான காரணம் என்னவென்றால் இப்போது ஏற்கனவே இன்னொரு பணிக்காகவும் இவர்கள் நூறு ரூபாய் கொடுத்திருந்தார்கள்.''

அன்னார் கூறுகின்றார்கள்: "தனது வீரத்தை வெளிப்படுத்திக் காட்டியுள்ள இன்னொரு தூய உள்ளம் கொண்ட நபர் ஸியால்கோட்டில் வசிக்கின்ற விறகு வியாபாரியான மியான் ஷாதி கான் சாஹிப் அவர்கள் ஆவார்கள். இப்போது வேறொரு பணிக்காக ஏற்கனவே அவர்கள் 150 ரூபாய் வழங்கி இருந்தார்கள். மேலும், இப்போது இந்தப் பணிக்காக 200 ரூபாயை சந்தாவாக அவர்கள் அனுப்பியுள்ளார்கள். இவர்கள் இறைவன் மீது நம்பிக்கை வைத்துள்ள எத்தகைய ஒரு நபராக இருக்கின்றார்கள் என்றால் இவர்களது வீட்டிலுள்ள எல்லா பொருள்களையும் பார்க்கும்போது இவர்களது முழு சொத்தின் மதிப்பும் ஒருவேளை 50 ரூபாய்க்கு அதிகமாக இருக்காது என்றே நான் கருதுகின்றேன்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள். இது பஞ்சத்தின் நாட்களாக இருப்பதால், மேலும் உலக வியாபாரத்தில் அழிவு தெளிவாக தென்படுவதால் நாம் மார்க்க வியாபாரம் செய்வதுதான் சிறந்ததாகும். எனவே, என்னிடம் இருந்தவை அனைத்தையும் நான் அனுப்பி விட்டேன்.'' (மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 314-315)

இவ்வாறு இன்னும் பலரது நல்லுதாரணங்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது நூல்களிலும் மல்ஃபூஸாத்திலும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அவர்கள் தங்களது தேவைகளைப் பொருட்படுத்தாமல் மார்க்க நோக்கங்களுக்காக அதிகமாக தியாகங்களைச் செய்துள்ளனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஜமாஅத்தைச் சார்ந்த நபர்களுக்கு இந்த தியாகங்களின் உணர்வு எந்த அளவு ஏற்பட்டதென்றால், ஒரு தலைமுறைக்குப் பிறகு அடுத்த தலைமுறை தியாகங்கள் செய்து கொண்டே செல்கின்றனர். இன்னும் சொல்வதென்றால், தொலை தூர நாடுகளில் வசிக்கின்ற மக்கள் கூட அவர்கள் பிறகு வந்து ஜமாஅத்தில் இணைந்தாலும் கூட (இப்போதும் இணைந்து கொண்டிருக்கின்றனர்) அவர்களும் இந்த சான்றோர்கள் செய்த தியாகங்கள் தொடர்பான விஷயங்களைக் கேட்கும்போது அல்லது இந்த நோக்கத்திற்காக தியாகம் செய்ய வேண்டிய தேவை உள்ளது என்பதை கேள்விப்படும்போது, அல்லாஹ்வின் வார்த்தைகளைக் கேட்டு பிறகு தியாகத்தின் ஆன்மாவை அவர்கள் புரிந்து கொள்ளும்போது அவர்களும் கூட தியாகங்களின் எத்தகைய நல்லுதாரணங்களை நிலைநாட்டியுள்ளனர் என்றால், அதைப் பார்த்து வியப்பாக இருக்கின்றது. செல்வந்தர்களை விட நடுத்தரத்திலுள்ள மக்கள் மற்றும் ஏழைகள் அதிகமாக தியாகங்களைச் செய்கின்றனர். வியக்கத்தக்க முன்மாதிரிகளை அவர்கள் காட்டுகின்றனர். நமது சாதாரணமான தியாகத்தினால் என்ன பெரிய வித்தியாசம் ஏற்பட்டு விடப் போகின்றது என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. மாறாக, அவர்கள் அல்லாஹ்வின் இந்த வார்த்தைகளைப் புரிந்திருக்கின்றனர். அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ وَتَثْبِيْتًا مِّنْ اَنْفُسِهِمْ
كَمَثَلِ جَنَّةٍ بِرَبْوَةٍ اَصَابَهَا وَابِلٌ فَاٰتَتْ اُكُلَهَا ضِعْفَيْنِ فَاِنْ لَّمْ يُصِبْهَا وَابِلٌ فَطَلٌّ ۔ وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ

தங்களுடைய செல்வத்தை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவும், தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ளவும் செலவு செய்பவரின் உதாரணம் உயரமான இடத்திலுள்ள ஒரு தோட்டத்திற்கு ஒப்பானது. அதன் மீது பெருமழை பொழிகின்றபோது அது தனது கனியை பல மடங்காகத் தருகின்றது. அதன் மீது பெருமழை பெய்யவில்லையாயினும் பனித்துளிகளே (அதற்கு போதுமானது.) நீங்கள் செய்து கொண்டிருப்பதை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான். (2:266)

எனவே, இந்த ஏழை மக்களின் தியாகம் 'தல்லுன்' அதாவது பனித்துளிகளுக்கு ஒப்பானதாகும். அவர்களது சாதாரண தியாகங்களினால் மார்க்கத்தின் தோட்டத்திற்கு கிடைக்கின்ற அந்த சிறிதளவு ஈரமானது அல்லாஹ்வின் அருளால் எண்ணற்ற கனிகளைக் கொண்டு வருகின்றது. நாம் ஓர் ஏழை ஜமாஅத்தாக இருந்தும் கூட அதிலுள்ள மக்கள் உலகிலுள்ள ஒவ்வோர் இடத்திலும் மார்க்கத்தைப் பரப்புகின்ற மற்றும் படைப்பினங்களுக்கு தொண்டு செய்கின்ற பணிகளைச் செய்து வருவதை நாம் பார்க்கின்றோம். பிறகு அல்லாஹ்வின் அருளால் நமது பணிகளில் அல்லாஹ் எந்த அளவு அருள்களைப் பொழிகின்றான் என்றால் இவ்வளவு குறைவான வசதிகளை உடைய நீங்கள் இவ்வளவு அதிகமான பணிகளை எவ்வாறு செய்கின்றீர்கள் என்று கேட்டால் உலகம் வியப்பில் ஆழ்ந்து விடுகின்றது. இதற்கு காரணம் தியாகம் செய்யக்கூடிய இம்மக்கள் அல்லாஹ் இவ்வாறு உதாரணம் கூறியுள்ள அந்த மக்களைச் சார்ந்தவர்களாக இருக்க அவர்கள் முயற்சி செய்வதேயாகும்.

அம்மக்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்: يُنْفِقُوْنَ اَمْوَالَهُمُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ அவர்கள் தமது செல்வத்தை இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக செலவு செய்கின்றனர். (2:266) அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது நோக்கமாக இருக்கும்போது கனிகளும் அதிகமாக வருகின்றன. பரக்கத்துகள் அதிகமாகின்றது. நான் ஏற்கனவே கூறியிருப்பதுபோன்று இந்த தியாகங்களின் நல்லுதாரங்களை இன்றும் நம்மால் பார்க்க முடிகின்றது. இன்னும் சொல்வதென்றால், இத்தகைய எண்ணற்ற நல்லுதாரணங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை நான் உங்கள் முன் எடுத்து வைக்கின்றேன்.

காதியானிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வசித்து வருகின்ற ஓர் இளம்பெண் அஹ்மதிய்யத் என்னும் உண்மை இஸ்லாத்தின் மடியில் வந்து அமர்கின்றபோது அவரது சிந்தனையில் எப்படிப்பட்ட மாற்றம் ஏற்பட்டு விடுகின்றது? தியாகத்தைப் பற்றிய எத்தகைய ஓர் அறிவை அவர் பெற்று விடுகின்றார்? இதைப் பற்றிய சம்பவத்தை அந்த இளம் பெண்ணின் சொற்களிலிருந்தே நீங்கள் கேளுங்கள். இந்த இளம்பெண் உகாண்டாவில் வசித்து வருகின்றார். இவர் படிப்பறிவு இல்லாதவர் அல்ல. மாறாக, இவர் பல்கலைக்கழகத்தில் படித்து வருகின்றார்.

இவர் கூறுகின்றார்: கடந்த ஜூலை மாதம் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு முன்னதாக எனக்கு சில பொருட்களை வாங்க வேண்டியதிருந்தது. ஆனால், இதற்காக தேவைப்படும் தொகை என்னிடம் இல்லாமல் இருந்தது. எனது சந்தாவிலும் எனக்கு பாக்கி இருந்தது. எனவே, பொருட்கள் வாங்க வைத்திருந்த அந்த தொகையை நான் சந்தாவிற்காக கொடுத்து விட்டேன். அல்லாஹ் எனக்கு கண்டிப்பாக உதவி செய்வான் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு இருந்தது. நான் எனது சந்தாவை செலுத்தி விட்டேன் என்று நான் நிம்மதியாக இருந்தேன். ஒரு மாதம் கடந்த பிறகு பல்கலைக்கழகம் திறப்பதற்கு மூன்று நாட்களே எஞ்சியிருந்த நிலையில் எனது ஒரு மாமி எனது தாயாரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நான் எப்போது பல்கலைக்கழகத்திற்குப் போவேன் என்பதைக் கேட்டு தெரிந்து கொண்டு என்னை தனது வீட்டிற்கு அழைத்தார்கள். நான் அன்று மாலை அவரது வீட்டிற்குச் சென்றேன். அப்போது அவர் எனக்கு கொஞ்சம் தொகையைத் தந்தார். அந்த தொகை பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு எனக்கு தேவைப்படும் தொகையை விட மிகவும் அதிகமாக இருந்தது. மேலும் இந்த தொகை சந்தாவாக நான் கொடுத்த தொகையை விட பத்து மடங்கு அதிகமாக இருந்தது. இவ்வாறு அல்லாஹ் எனது துஆவை கேட்டேன். மேலும் நான் எதிர்பார்க்காத இடத்திலிருந்து எனக்கு உதவி செய்தான்.

பிறகு இந்தியாவைச் சார்ந்த ஒரு நபர் தொடர்பாக அங்குள்ள இன்ஸ்பெக்டர் கமருத்தீன் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

கேரள மாநிலத்தைச் சார்ந்த மஞ்சேரி ஜமாஅத்தைச் சார்ந்த ஒரு நபர் ரெக்ஸின் வியாபாரம் செய்து வந்தார். நான் வக்ஃபே ஜதீது சந்தா வசூல் செய்வதற்காக அவரது கடைக்குச் சென்றேன். அப்போது அவர் எனது அதிகமான பணம் ஓரிடத்தில் சிக்கியிருக்கின்றது. அதனால் எனக்கு பெரும் சிரமம் ஏற்பட்டிருக்கின்றது என்று கூறினார். அவ்வாறிருந்தும் கூட அவர் ஒரு பெரும் தொகைக்கான செக்கை எழுதித் தந்தவாறு இப்போது எனது அக்கவுண்டில் இந்த அளவு பணம் இல்லை. ஆனால், நான் இந்த தொகையை விரைவாக செலுத்துவதற்கான நல்வாய்ப்பு கிடைக்க நீங்கள் துஆ செய்யுங்கள் என்று கூறினார். அவர் கூறுகின்றார்: அடுத்த நாளே அவரிடமிருந்து ஃபோன் வந்தது. அதில் அல்லாஹ்வின் அருளால் செக் எழுதிக் கொடுத்த பிறகு எனது அக்கவுண்டில் ஒரு பெரும் தொகை வந்து விட்டது. எனவே, எனது செக்கை நீங்கள் ரொக்க தொகையாக மாற்றிப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அவர் கூறினார். சந்தாவின் பரக்கத்தினால் மட்டும்தான் அல்லாஹ் இவ்வளவு விரைவாக அதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளான் என்று அவர் கூறினார்.

கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு நாடான தன்ஸானியாவில் வசித்து வருகின்ற ஒரு விதவைப் பெண்ணின் நல்லுதாரணத்தை எடுத்து வைக்கின்றேன். அவர்கள் தொடர்பாக அங்குள்ள அமீர் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

அரிங்கா டவுணில் முஅல்லிம் அவர்கள் ஒரு விதவைப் பெண்ணான அமீனா சாஹிபா அவர்களிடம் வக்ஃபே ஜதீது சந்தாவை வசூல் செய்வதற்காகச் சென்றார். அப்போது அந்தப் பெண் மிகவும் துக்கம் நிறைந்த உள்ளத்துடன் இப்போது என்னிடம் கொடுப்பதற்கு எதுவுமே இல்லை என்று கூறினார். ஆனால், எங்கிருந்தாவது தொகை கிடைக்கும்போது நானே அதைக் கொண்டு வந்து உங்களிடம் தருவேன் என்று அவர் கூறினார். முஅல்லிம் சாஹிப் அவர்கள் தனது வீட்டைச் சென்றடைவதற்கு முன்னதாகவே அந்தப் பெண் 10,000 ஷிலிங்கை எடுத்துக் கொண்டு முஅல்லிம் சாஹிபிடம் வந்து இந்த தொகை ஓரிடத்திலிருந்து எனக்கு வந்தது. எனவே, முதலில் நாம் சந்தாவை செலுத்து விடுவோம். நமக்கு செலவுக்கு தேவைப்படுவதை பிறகு பார்த்து கொள்ளலாம் என்று நான் எண்ணினேன். நான் 25,000 இதற்காக வாக்குறுதி அளித்திருந்தேன். எனவே, மீதுமுள்ள 15,000 ஷிலிங்கையும் எங்கிருந்தாவது எனக்கு தொகை கிடைக்கும்போது நான் கொண்டு வந்து கொடுத்து விடுவேன் என்று அவர் கூறினார். 10 நிமிடங்கள் கழிந்த பிறகு மீண்டும் அவர் தொகையை எடுத்து கொண்டு அங்கு வந்தார். பிறகு அவர் கூறினார்: அல்லாஹ் என்னுடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதை பாருங்கள். நான் அவனது வழியில் 10,000 கொடுத்து விட்டு சென்றேன். நான் வீட்டிற்கு வந்து சேர்ந்ததுதான் தாமதம். அல்லாஹ் எனக்கு 35,000 ஸீலிங்கை அனுப்பித் தந்து விட்டான். அதிலிருந்து 15,000 ஷிலிங்கை சந்தாவாக செலுத்திய பிறகும் கூட என்னிடம் 20,000 எஞ்சியிருக்கின்றது என்று அவர் கூறினார். இது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் கொடையும், சந்தா செலுத்தியதன் அருளும் ஆகும் என்று அவர் கூறினார். இவ்வாறு அவரது ஈமான் அதிகரித்தது.

மத்திய ஆப்பிரிக்காவின் ஒரு நாடான கோங்கோவிலுள்ள மக்களிடம் எந்த அளவு தியாகம் செய்வதற்கான ஆன்மா இருக்கின்றது? இதற்கான ஓர் உதாரணத்தைக் கூறுகின்றேன். அங்குள்ள முபல்லிக் ஆன ரமீஸ் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: கேலோம்பாயீ (Kalombayi) என்ற ஜமாஅத்தைச் சார்ந்த இறைவன் பக்கம் மக்களை அழைக்கின்ற ஒரு சகோதரான சயீதி சாஹிப் அவர்கள் அக்கம் பக்கத்திலுள்ள ஐந்து ஜமாஅத்துகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்கள். அங்கு தப்லீக் செய்தார்கள். இன்றைய நாட்களில் அங்கு நாட்டின் நிலைமை மோசமாக இருந்து வருகின்றது. பாதுகாப்பு இல்லாத அபாயகரமான நிலைமையிலும் கூட அவர் தனது பகுதியைச் சார்ந்த எல்லா ஜமாஅத்துகளுக்கும் சுற்றுப் பயணத்தில் சென்றார்கள். சுற்றுப் பயணத்தின்போது நற்கூலியைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் மோசமான நிலைமை இருந்தும் கூட பயணத்திற்கான செலவையும் தன் தரப்பிலிருந்தே அவர் செலுத்தினார். அவர் 53,000 சந்தா வக்ஃபே ஜதீத் ஒன்று திரட்டியுள்ளார். அதைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு நான் பழைய அஹ்மதி ஆவேன். இளைஞர்களுக்கு நான் ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்று அவர் கூறினார். அங்குள்ள பழைய அஹ்மதிகள் கூட எந்த அளவு பழைய அஹ்மதிகளாக இருப்பர்? அதிகபட்சமாக 20 வருட பழைய அஹ்மதிகளாகத்தான் அவர்கள் இருப்பர். இவரது வயது 60 ஐக் கடந்து விட்டது. ஆனால், மிகவும் உழைத்தவாறு தப்லீகின் பணியையும் இவர் செய்கின்றார். அத்துடன் சந்தா செலுத்துவது தொடர்பாகவும் மக்களுக்கு இவர் கவனமூட்டுகின்றார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு இந்த ஆன்மாதான் இந்த மக்களிடம் உருவாகி இருக்கின்றது. இவர்கள் மிகவும் தொலை தூரத்திலுள்ள பகுதிகளில் வசிக்கின்றனர். அந்தப் பகுதிகளில் சாலை வசதிகள் கூட இல்லை. அந்தப் பகுதி தண்ணீர் நிறைந்த பகுதியாக இருப்பதால் பெரும்பாலும படகில் அங்கு பயணம் மேற்கொள்ள வேண்டியது வரும். இடைவெளி மிகவும் தூரமாக இருக்கும்.

மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு நாடான பெனினில் உள்ள ஓர் அஹ்மதியின் முன்மாதிரியைப் பாருங்கள். அவர் அஹ்மதிய்யத்தை ஏற்று ஒரு வருடம் கூட கழியவில்லை. ஆனால், தியாகத்தின் ஆன்மா பற்றிய அறிவு எந்த அளவு உயர்ந்த தரத்தில் இருக்கின்றது? இன்னும் சொல்வதென்றால், பழைய அஹ்மதிகளுக்கு இவர் ஒரு முன்மாதிரியாகத் திகழ்கின்றார். அங்குள்ள முபல்லிக் ஆன முஸஃப்பர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

கதுனீ மண்டலத்தைச் சார்ந்த ஒரு கிராமமான டீகாம்பே (Dekambe) –வில் இந்த வருடம் ஜமாஅத் நிறுவப்பட்டது. இங்கு வசிப்பவர்கள் பொதுவாக மீன்களைப் பிடித்து விற்பனை செய்பவர்களாவர். இந்த மீனவர்களுக்கு இதன் மூலமாகவே வாழ்நாள் கழிந்து வந்தது. உள்ளூர் பிரச்சாரகர் இந்த கிராமத்தைச் சார்ந்தவர் –களுக்கு சந்தா செலுத்துமாறு கூறினார். அப்போது பொருளாதார ரீதியில் மிகவும் பலவீனமான நிலையில் இருந்த ஓர் அஹ்மதி நண்பர் உடனடியாக அவரது குரலுக்குச் செவிசாய்த்தவாறு ஓர் ஆயிரம் ஃபிராங்க்கை இதற்காக வழங்கினார். எனது நிலைமை நன்றாக இல்லை என்றாலும் எந்த ஜமாஅத்தில் நான் இணைந்துள்ளேனோ அந்த ஜமாஅத்திலிருந்து ஒரு திட்டம் அறிவிக்கப்படும் போது அதில் நான் பங்கு பெறாமல் விலகி இருப்பதை நான் விரும்பவில்லை என்று அவர் கூறினார்.

கிலாஃபத்துடன் உள்ள தொடர்பு தொடர்பாகவும் குத்பா பேருரையின் தாக்கம் மக்கள் மீது எவ்வாறு ஏற்பட்டுள்ளது? பிறகு தியாகம் செய்வதன் பக்கம் கவனம் எவ்வாறு உருவாகின்றது? இதற்கான உதாரணத்தை மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள நாடான புர்கினோஃபாஸோவைச் சார்ந்த சில இளைஞர்களிடம் நீங்கள் பார்க்கலாம். இவர்கள் அஹ்மதிகாளகி அதிக நாட்கள் ஆகவில்லை. ஆனால், இவர்களது தரம் எப்படி இருக்கின்றது?

அங்குள்ள முரப்பியான அமீன் குலோபி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அங்குள்ள பன்ஃபோரோ மண்டலத்தில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 30 ஆம் தேதி நான் நிகழ்த்திய கடந்த வருடத்தின் இறுதி ஜுமுஆ பேருரையை அங்குள்ள இளைஞர்கள் கேட்டனர். இப்போது புதிதாக அஹ்மதிய்யத்தை தழுவிய சில இளைஞர்களும் சில பழைய அஹ்மதிகளும் இந்த குத்பாவைக் கேட்ட பிறகு உடனடியாக வீட்டிற்குச் சென்று புது வருட நிகழ்ச்சிகளுக்காக எவற்றையெல்லாம் அவர்கள் ஒன்று திரட்டி வைத்திருந்தார்களோ அதைக் கொண்டு வந்து வக்பே ஜதீத் சந்தாவாக அவர்கள் கொடுத்து விட்டனர். மேலும் காலத்தின் கலீஃபா அவர்கள் எங்களுக்கு புது வருடத்தைக் கொண்டாடுவதற்கான வழிமுறையை எடுத்து கூறியிருப்பதால் நாங்கள் இந்த தொகையை சந்தாவாக கொடுக்கின்றோம். மேலும், இரவில் தஹஜ்ஜுத் தொழுது நாங்கள் புது வருடத்தைக் கொண்டாடுவோம் என்று அவர்கள் கூறினர். இவ்வாறு அந்த இளைஞர்கள் அந்த நாளில் ஏறக்குறைய 76,000 ஃபிராங்க் ஸிஃபாவை சந்தாவாக செலுத்தினர்.

பிறகு மேற்கு ஆப்பிரிக்காவை சார்ந்தச் இன்னொரு நாடான ஐவரிகோஸ்டைச் சார்ந்த ஒரு புதிய ஜமாஅத்திலுள்ள மக்களின் தியாகத்தைப் பாருங்கள். அங்குள்ள பவாகே மண்டலத்தின் முஅல்லிம் மாமாது (Mamadou) சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: எங்களது மண்டலத்தைச் சார்ந்த கிராமமான Niavogo –விலுள்ள மக்கள் இந்த வருடம்தான் ஜமாஅத்தில் இணைந்தனர். அவர்கள் அஹ்மதிகளாகி ஒரு வருடம்தான் ஆகின்றது. நான் இந்த புதிய அஹ்மதிகளிடம் வக்ஃபே ஜதீத் சந்தாவின் பங்கு பெறுமாறும் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளுமாறும் கூறினேன். இந்த புதிய அஹ்மதிகளிடம் காலத்தின் கலீஃபா அவர்கள் எல்லா அஹ்மதிகளும் வக்ஃபே ஜதீது மற்றும் தஹ்ரீகே ஜதீது சந்தாவில் பங்கு பெற வேண்டும் என்று கூறியுள்ளார்கள் என்று நான் கூறினேன். சில மக்கள் சிறிதளவு சந்தா தொகையை வழங்குவார்கள் என்று நான் நினைத்தேன். ஏனென்றால், அங்கு ஏழ்மை அதிகமாக இருந்தனர். ஆனால், அங்குள்ள நிலைமை இதற்கு நேர் மாற்றமாக மாறி விட்டது. ஏறக்குறைய இந்த கிராமத்தைச் சார்ந்த ஒவ்வொரு நபரும் வக்ஃபே ஜதீத் சந்தாவை செலுத்தினர். இன்னும் சொல்வதென்றால் ஒரு நண்பர் வக்ஃபே ஜதீது சந்தா செலுத்தியதுடன் மட்டுமல்லாமல் 600 கிலோ மீட்டர் பயணம் செய்து ஆண்டு மாநாட்டிலும் இவர் கலந்து கொள்ள முன் வந்தார்கள். இதற்காக அவர் பயணம் மேற்கொள்ள இருக்கின்றார்.

பிறகு தியாகத்தின் இன்னோர் உதாரணத்தையும் அல்லாஹ் தியாகம் செய்தவர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதைப் பற்றியும் கூறுகின்றேன். தன்ஸானியாவிலிருந்து அங்குள்ள முபல்லிக் ஆன யூசுஃப் உஸ்மான் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

கால்களில் ஊனமுள்ள ஓர் அஹ்மதி சகோதரர் இருந்தார். இதன் காரணமாக அவரால் எந்தப் பணியும் செய்ய முடியவில்லை. தன்ஸானியாவிலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் இதுவரை மின்சார வசதி இல்லாத நிலை நீடித்து வருகின்றது. இதனால் சில மக்கள் சிறு சிறு Solar Panel –ஐக் கொண்டு வந்து அதன் மூலமாக தங்கள் வீடுகளில் பல்பு எரிவதற்கான ஏற்பாட்டைச் செய்கின்றனர். நமது இந்த அஹ்மதி சகோதரரும் ஒரு சிறிய Solar Panel மூலமாக மக்களது மொபைல்களை ரிசார்ஜ் செய்து கொடுத்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் தமது நாட்களைக் கழித்து வருகின்றனார். இதன் மூலம் எந்த அளவு குறைவாக வருமானம் வந்தாலும் அந்த தொகைக்குரிய சந்தாவை முறையாக அவர் செலுத்தி வந்தார். ஒரு நாள் நமது முஅல்லிம் அவரிடம் சந்தா செலுத்துமாறு கவனமூட்டியபோது, எனக்கு கடந்த இரண்டு நாட்களில் 2000 ஸீலிங் வருமானம் வந்துள்ளது. நான் அல்லாஹ்வின் வழியில் இதை வழங்கி விடுகின்றேன் என்று அவர் கூறினார். முஅல்லிம் சாஹிப் அவர்கள் அவரிடம் இந்த எல்லா தொகையையும் நீங்கள் சந்தாவாக செலுத்தி விட்டால் பிறகு வீட்டில் குழந்தைகளுக்கு சாப்பிட என்ன கொடுப்பீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர் அல்லாஹ் ரஸ்ஸாக் அதாவது அதிகமாக உணவளிப்பவன் ஆவான். அவன் சுயமே இதற்கான ஏற்பாட்டைச் செய்வான் என்று பதில் கூறினார்.

முஅல்லிம் சாஹிப் அவர்கள் கூறினார்கள்: நான் அந்த தொகைக்கான ரசீதை கொடுத்ததுதான் தாமதம் பல மக்களும் அவரிடம் தங்களது மொபைல்களை சார்ஜ் செய்வதற்காக வந்தனர். அதன் மூலம் அவர் கொடுத்த சந்தா தொகையை விட அதிகமாக அவருக்கு வருமானம் கிடைத்தது. அந்த அஹ்மதி சகோதரர் முஅல்லிம் சாஹிபிடம், சந்தாவை செலுத்துவதன் மூலம் எந்த அளவு பரக்கத்தை எனக்கு இறைவன் வழங்கியுள்ளான் என்பதை நீங்கள் பார்த்தீர்களா? இப்போது நான் கொடுத்ததை விட அதிகமான தொகையை அவன் எனக்கு திருப்பித் தந்து விட்டான் என்று கூறினார்.

பிறகு எவ்வாறு தியாகம் செய்வதன் மூலம் தியாகம் செய்பவர்களுக்கு அல்லாஹ் வழங்குகின்றான் என்பதைப் பற்றிய இன்னோர் உதாரணமும் இருக்கின்றது. தன்ஸானியாவிலுள்ள சேங்கா மண்டலத்தைச் சார்ந்த ஜமாஅத்தின் ஒரு நண்பரின் மகனுக்கு கடுமையான மலேரியா காய்ச்சல் வந்தது. சிகிச்சைக்காக அவரது சட்டைப் பையில் 1500 ஷிலிங் மட்டுமே இருந்தது. செகரட்டரி மால் அவரது வீட்டிற்குச் சென்றார். சந்தா செலுத்துவதன் பக்கம் கவனமூட்டினார். அவர் தனது சட்டைப் பையிலிருந்த அந்த தொகையை எடுத்து செகரட்டரி மாலிடம் கொடுத்து விட்டார்.

இந்த நண்பர் கூறுகின்றார்: முதலில் எனக்கு எனது மகனுக்கு மருந்து வாங்குவதற்க பைசா எங்கிருந்து கிடைக்கும்? என்ற எண்ணம் வந்தது. பிறகு அல்லாஹ்வின் வழியில் நான் இந்த தொகையைக் கொடுத்துள்ளேன். அல்லாஹ் சுயமே இதற்கான ஏற்பாட்டைச் செய்வான் என்று நான் கூறினேன். சிறிது நேரம் கழிந்ததும் இன்னொரு நகரத்திலிருந்து இவரது மூத்த மகன் இவருக்கு ஃபோன்

செய்து நான் 80,000 ஷிலிங் அனுப்புகின்றேன் என்று கூறினார். இந்தத் தொகை மூலம் அவரது மகனுக்கான சிகிச்சையும் நடைபெற்றது. அவரது மற்ற தேவைகளும் நிறைவேறின.

அந்த நண்பர் கூறுகின்றார்: அல்லாஹ் பன்மடங்கு அதிகமாக எனக்கு திரும்ப வழங்கியுள்ளான். இவ்வாறு இந்த சம்பவத்தை அவர் மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுகின்றார். மேலும் உள்ளூரிலுள்ள அஹ்மதிகளுக்கு சந்தாவின் முக்கியத்துவத்தைப் பற்றி அவர் தெளிவாக எடுத்துக் கூறி வருகின்றார்.

பிறகு மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு நாடான மாலியிலுள்ள ஒரு நபரது தியாகம் பற்றிய சம்பவம் இதுவாகும். அங்குள்ள முபல்லிக் ஆன அஹ்மது பிலால் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

செகாசோ மண்டலத்தைச் சார்ந்த ஒரு நண்பர் 2013 –ல் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட அந்த நேரத்தில் அவர் கடுமையான பொருளாதார கஷ்டங்களுக்கு இரையாகி இருந்தார். கடன்காரராக ஆனதோடு மட்டுமல்லாமல் பல வகையான குடும்பக் கவலைகளும் அவருக்கு இருந்தது. இவர் பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கான நேரமும் அருகில் வந்து கொண்டிருந்தது. அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவருக்கு சந்தா செலுத்துவதனால் கிடைக்கின்ற அருள்கள் பற்றி தெரிய வந்ததும் அவர் சுயமே தன்னிடம் அவர் முறையாக சந்தா செலுத்தி வருவதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டார். பிறகு அவ்வாறே அவர் செய்து வந்தார். கடினமான நிலைமைகள் இருந்தும் கூட தனது தகுதிக்கு ஏற்ப அவர் சந்தா செலுத்தி வந்தார். அவர் கூறுகின்றார்: அல்லாஹ்வின் அருளால் சந்தா செலுத்தியதன் பரக்கத்தினால் நான் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே எனது எல்லா கடன்களையும் திரும்ப செலுத்தி விட்டேன். குடும்பக் கவலைகளும் முடிவுக்கு வந்து விட்டன. அரசாங்கத்தின் தரப்பிலிருந்து எனக்கு பதவி உயர்வும் கிடைத்தது. நான் ஓய்வு பெறும் காலம் தாமதமாக்கப்பட்டது. இப்போது இவர்கள் வஸிய்யத் அமைப்பிலும் இணைந்து விட்டார்கள்.

செரலியோனிலிருந்து அங்குள்ள முபல்லிக் முனீர் ஹுஸைன் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: பவாஜிபு (Boajibu) -விலுள்ள ஒரு ஜமாஅத்தைச் சார்ந்த ஓர் அஹ்மதி பெண் 4,000 லியான் வாக்குறுதி தந்திருந்தார். இவரது வருமானத்திற்கான குறிப்பிடத்தக்க எந்த ஒரு வழியும் இல்லாமல் இருந்தது. அவரது சிறிய தோட்டத்தில் அவர் கஸாவா என்ற செடியை நட்டியிருந்தார். அது பீட்ரூட் போன்ற ஒன்றாகும். அதனை சாப்பிடவும் செய்யலாம். அதை விற்று அவர் காலம் கழித்து வந்தார். சந்தா செலுத்துவதற்கான நேரம் அருகில் வந்த போது செகரட்டரி சாஹிப் வசூல் செய்வதற்காக சென்றார். அப்போது சந்தா செலுத்துவதற்காக எவ்வளவு தொகையை அவர் ஒன்று சேர்த்து வைத்திருந்தாரோ அந்த தொகையை ஒரு சிறுவன் அவர் வைத்த இடத்திலிருந்து எடுத்து அதை செலவு செய்து விட்டான். இதனால் அவர் மிகுந்த கவலைக்கு ஆளானார். இப்போது அவரது ஈமானின் நிலையையும் பாருங்கள். இவர்களது ஒரு மகன் மதுக்கடையில் வேலை பார்த்து வந்தார். வேறு வழியில்லாமல் அவர் அந்த தொழிலை செய்து வந்தார் அல்லது அவர் சரியாக ஈமான் கொள்ளாத நிலையில் இருந்து வந்தார். அந்த மகன் நான் உங்களுக்கு பைசா தருகின்றேன். கடனாக அதை தருகின்றேன் என்று கூறினார். அதை அந்த பெண் உறுதியாக மறுத்து விட்டார். இந்த பைசா ஹலாலானது அல்ல. எனவே, இதிலிருந்து என்னால் சந்தா கொடுக்க முடியாது என்று அவர் கூறினார். இதுவே அவரது ஈமானின் தன்மான உணர்வாகும். பிறகு அல்லாஹ்வும் அவருடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதை பாருங்கள். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதுதான் சந்தா செலுத்துவதன் நோக்கமாகும். இந்த தருணத்தில் அந்த பெண்ணுக்கு அறிமுகமில்லாத ஒரு நபர் அங்கு வந்தார். அவரைப் பற்றி முற்றிலும் இந்த பெண்ணுக்கு எதுவும் தெரியாது. அந்த நபர் 10,000 லியானை இந்தப் பெண்ணுக்கு வழங்கினார். அந்தப் பெண்ணும், தான் கூறியிருந்த வாக்குறுதிக்கு ஏற்ப 4,000 லியான் சந்தாவாக கொடுப்பதற்குப் பகரமாக 10,000 லியானை சந்தாவாக கொடுத்தார். மேலும் இந்த தொகையை நான் சந்தா செலுத்த வேண்டும் எனபதற்காகவே அல்லாஹ் அனுப்பியுள்ளான் என்று அவர் கூறினார். மேலும் அடுத்த வருடத்திற்கான வாக்குறுதியாக அவர் 10,000 லியான் எழுதினார்.

செரலியோனிலிருந்து அங்குள்ள முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: போ மண்டலத்தைச் சார்ந்த ஒரு புதிதாக பைஅத் செய்த நண்பருக்கு ஒரு நிலம் தொடர்பாக நீண்ட காலமாக ஒரு வழக்கு இருந்து வந்தது. எதிரியாக இருந்தவர் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவராக இருந்து வந்தார். வெளிப்படையாகப் பார்க்கும்போது அந்த வழக்கில் வெற்றி பெறுவதற்கான எந்தவொரு வழியும் அவருக்கு தென்படாமல் இருந்து வந்தது. இந்தத் தருணத்தில் அவர் பள்ளிவாயிலில் பொருள் தியாகம் செய்வதனால் கிடைக்கும் அருள்களைப் பற்றி செவியுற்றார். அவர் கூறுகின்றார்: நான் பொருள் தியாகத்தின் அருள்களைப் பற்றி கேட்டதும் நானும் சந்தா கொடுத்து விட வேண்டும் என்று நான் எண்ணினேன். புதிதாக பைஅத் செய்த இவர் கிறிஸ்தவராக இருந்து பிறகு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். இவர் கூறினார்: சந்தாவின் பரக்கத்தினால் எனது நிலம் தொடர்பான விவகாரம் ஒருவேளை முடிவுக்கு வந்து விடலாம் என்று நான் கருதினேன். இதனால் தனது தகுதிக்கு ஏற்ப இந்த நபர் சந்தா செலுத்தினார். இவ்வாறு அவர் சந்தா செலுத்திய சிறிது காலம் கழிந்ததுமே வெளிப்படையாக பார்க்கும்போது அவ்வாறு நடைபெற சாத்தியமற்றதாக கருதப்பட்ட அந்த வழக்கின் தீர்ப்பு இவருக்கு சாதகமாக அமைந்தது. இந்த நண்பர் கூறுகின்றார்: இது எல்லாமே பொருள் தியாகத்தின் காரணமாக கிடைத்த அருள்களாலேயே நடந்திருக்கின்றது என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது.

காங்கோ கன்சாஷாவின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஒரு பெண் சிறிய அளவில் ஒரு வியாபாரம் செய்து வருகின்றார். நாட்டின் நிலைமைகளின் காரணமாக வருடத்தின் ஆரம்பத்திலேயே இந்த வியாபாரத்தில் எந்த இலாபமும் கிடைக்காது என்று எனக்கு தோன்றியது என்று அவர் கூறுகின்றார்.

அவர் கூறுகின்றார்: ஆனால் நான் வருடத்தின் ஆரம்பத்திலேயே வக்ஃபே ஜதீத்தின் சந்தாவைச் செலுத்தி விட்டேன். அல்லாஹ்வுடன் செய்யப்பட்ட வியாபாரம் இழப்பிற்கு இரையாகாது என்று நான் எண்ணினேன். அந்த பெண் கூறுகின்றார்: அல்லாஹ்வின் அருளால் அவருக்கு வியாபாரத்தில் இலாபம் கிடைத்தது. மேலும் இப்போதுள்ள நாட்டின் நிலைமைகள் மோசமாக இருந்தும் கூட அவரது வியாபாரத்தில் எந்த இழப்பும் ஏற்படவில்லை.

அஹ்மதிகள் செய்கின்ற தியாகங்கள் மற்றவர்கள் மீது எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த தாக்கமும்கூட தப்லீகிற்கான வழியை திறந்து தருகின்றது.

பங்களாதேஷின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மூன்று நண்பர்கள் எங்களது தப்லீகின் கீழ் இருந்து வந்தனர். அதிகமாக தப்லீக் செய்த பிறகும் கூட அவர்களில் எவருமே பைஅத் செய்வதற்கு முன்வரவில்லை. கடந்த ஜுமுஆவில் இந்த மூன்று நண்பர்களும் பள்ளிவாயிலுக்கு வந்தனர். ஜுமுஆ குத்பாவின்போது வக்பே ஜதீத் சந்தா செலுத்துமாறு கவனமூட்டப்பட்டது. ஜுமுஆவிற்கு பிறகு மக்கள் சந்தா செலுத்துவதற்காக வரிசைகளை உருவாக்கி வரிசையில் நிற்க ஆரம்பித்தனர். இவர்களது தப்லீகின் கீழ் இருந்த நண்பர்கள் இந்த காட்சியை கண்டதும் சந்தா வாங்குவதற்காக பேசி பேசி எங்களது மவ்லவிமார்களின் நாவும் தொண்டையும் வறண்டு விடுகின்றது. அதற்கு பிறகும் கூட மக்கள் சந்தா கொடுப்பதில்லை. இங்கோ ஒரு சிறிய அறிவிப்புதான் செய்யப்பட்டது. மக்கள் உடனடியாக சந்தா செலுத்துவதற்காக வரிசைகளை உருவாக்கி நிற்க ஆரம்பித்து விட்டனர். இதுவே உண்மையான இஸ்லாத்தின் ஆன்மாவாகும் என்று கூறினர். இந்த காட்சியை கண்ட பிறகு அந்த மூன்று நண்பர்களும் அப்போதே பைஅத் செய்து விட்டனர். மேலும் வக்பே ஜதீத் சந்தாவும் செலுத்தினர்.

பிறகு பெனிலுள்ள ஒரு மண்டலத்தின் முஅல்லிமான அப்துல்லாஹ் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: புதிதாக பைஅத் செய்தவர்களின் ஒரு ஜமாஅத்தான பாபாஸா (Kpakpaza) -விற்கு நான் சுற்றுப் பயணத்தில் சென்றிருந்தேன். அங்கிருந்த ஒரு புதிய அஹ்மதியான அல்ஹாஜ் அபூபக்ர் சாஹிப் அவர்கள் இந்த சந்தா தொகை எங்கு எவ்வாறு செலவு செய்யப்படுகின்றது என்று கேட்டார். அவருக்கு பொருளாதார அமைப்பு பற்றி சரியாக எதுவும் தெரியாமல் இருந்தது. அவரிடம் அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த சந்தாவின் மூலமாகவே பள்ளிவாயில்களைக் கட்டுகின்றது திருக்குர்ஆனின் மொழியாக்கங்களையும் மார்க்க நூல்களையும் வெளியிடுகின்றது. இவ்வாறே இந்த சந்தாவின் மூலமாகவே மருத்துவமனைகளும் பள்ளிக்கூடங்களும் அநாதைகளுக்கான இல்லங்களும் கட்டப்படுகின்றன. சுருக்கமாக, சந்தாவாக கொடுக்கப்படுகின்ற ஒவ்வொரு பைசாவும் மார்க்கப் பணிகளுக்காகவும் ஆக்கப்பூர்வமான பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது என்று அவரிடம் கூறப்பட்டது. அபூபக்ர் சாஹிப் அவர்கள் இதை கேட்டதும் மவ்லவிகள் என்னிடம் ஸக்காத்தையும் தான தருமங்களையும் பெறுவதற்காக வந்தனர். ஆனால் இந்த தொகை எங்கு செலவு செய்யப்படுகின்றது? என்பதை பற்றி அவர்கள் ஒருபோதும் என்னிடம் எதுவும் கூறியதில்லை என்று கூறினார். இதற்கு பிறகு அவர் உடனடியாக சந்தாவை செலுத்தினார். மேலும் ஜமாஅத்தின் எல்லா சந்தாக்களிலும் நான் அதிகமாக பங்கு பெறுவேன் என்றும் அவர் கூறினார்.

சுருக்கமாகக் கூறுவதென்றால் இந்த காலக்கட்டத்தில்கூட அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு எத்தகைய மக்களை வழங்குகின்றான் என்றால் அவர்கள் தியாகங்களில் முன்னேறிச் செல்பவர்களாக இருக்கின்றனர். ஆனால், சில நாட்களிலேயே இறைவனுக்காகவும் மார்க்கத்திற்காகவும் தியாகங்களைச் செய்வதற்கான ஒரு துடிப்பு அவர்களிடம் உருவாகி விடுகின்றது. ஆனால், நல்ல வசதியான நிலைமையிலுள்ள மக்கள் சிந்திக்க வேண்டிய இடமாகவும் இது இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், இது அவர்கள் கவலைப்படவேண்டிய இடமாக இருக்கின்றது. அல்லாஹ் அவர்களுக்கு விரிவான வசதியான நிலைமையைத் தந்துள்ளான். பணக்கார நாடுகளில் அவர்கள் வாழ்கின்றனர். ஆனால், அவர்களது தியாகங்களைச் சாதாரணமானதாக இருக்கின்றன. இங்கும் பலர் அப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர். அவர்களின் தியாகங்கள் மிகவும் அசாதாரன தியாகங்களாகவே இருக்கின்றன. ஆனால், பல செல்வந்தர்களும் உலகின் ஒவ்வோர் இடத்திலும் இதன் பக்கம் மிகவும் குறைவாகவே கவனம் செலுத்துகின்றனர். அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

ஜனவரி மாதத்தின் முதல் ஜுமுஆவில் வக்ஃபே ஜதீதின் புது வருடத்திற்கான அறிவிப்பை செய்வது வழக்கத்தில் இருந்து வருகின்ற ஒரு வழிமுறையாக இருக்கின்றது. எண்ணற்ற சம்பவங்களிலிருந்து ஒரு சிலவற்றை நான் உங்களுக்கு கூறிய பிறகு அல்லது சந்தாவின் முக்கியத்துவத்தைப் பற்றி கூறிய பிறகு இப்போது நான் வக்ஃபே ஜதீதின் 60 –வது வருடம் துவங்கியதற்கான அறிவிப்பை செய்கின்றேன். கடந்த வருடத்தில் இருந்த அல்லாஹ்வின் அருள்களையும் நான் கூறுவேன். வக்ஃபே ஜதீதின் வருடம் டிசம்பர் 31 ஆம் தேதி முடிவடைகின்றது. 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வக்ஃபே ஜதீதின் 59 –வது வருடம் முடிவடைந்தது. அல்லாஹ்வின் அருளால்

உலகிலுள்ள ஜமாஅத்துகளிலிருந்து இதுவரை வந்துள்ள அறிக்கைகளின் அடிப்படையில் 80 இலட்சத்து 20 ஆயிரம் பவுண்டுகளை ஜமாஅத் வக்ஃபே ஜதீதிற்காக தியாகம் செய்துள்ளது. கடந்த வருடத்தை விட இது 11 இலட்சத்து 29 ஆயிரம் பவுண்டுகள் அதிகமாகும்.

இந்த வருடமும் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பாகிஸ்தான் பட்டியலில் முதல் இடத்தை வகிக்கின்றது. உள்ளூர் கரன்ஸியின் அடிப்படையில் கடந்த வருடத்தை விட பெருமளவில் சந்தாவை அதிகரிக்க செய்துள்ள நாடுகளில் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள நாடான கானா அடுத்த இடத்தில் உள்ளது. இதற்கு அடுத்த இடத்தில் ஜெர்மனி இருக்கின்றது. அதற்கு அடுத்த இடத்தில் கனடா இருக்கின்றது.

ஆப்பிரிக்க நாடுகளில் தியாகங்களின் போட்டியில் தர வரிசையின் அடிப்படையில் முதலில் மாலி இருக்கின்றது. பிறகு புர்கினோஃபாஸோ வருகின்றது. அதற்கு அடுத்த இடத்தில் லைபீரியாவும், அதற்கு அடுத்த இடங்களில் முறையே தென் ஆப்பிரிக்கா, செராலியோன் மற்றும் பெனின் உள்ளது.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பாகிஸ்தானைத் தவிர இருக்கின்ற வெளிநாடுகளில் தரவரிசையின் அடிப்படையில் முதல் 10 இடங்களிலுள்ள நாடுகள் இவையாகும். முதல் இடத்தில் யூ.கே இருக்கின்றது. இரண்டாவது இடத்தில் ஜெர்மனியும், மூன்றாவது இடத்தில் அமெரிக்காவும், நான்காவது இடத்தில் கனடாவும், ஐந்தாவது இடத்தில் இந்தியாவும், ஆறாம் இடத்தில் ஆஸ்திரேலியாவும், மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள ஒரு நாடு ஏழாவது இடத்திலும், எட்டாவது இடத்தில் இந்தோனேஷியாவும், மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள ஒரு நாடு ஒன்பதாவது இடத்திலும், பத்தாவது இடத்தில் கானாவும் இருக்கின்றது. அதற்குப் பிறகு பெல்ஜியம், சுவிட்சர்லாந்தும் வருகின்றது.

தனி நபர் விகிதாச்சார சந்தா செலுத்துவதன் அடிப்படையில் அமெரிக்கா முதலிடத்தில் இருக்கின்றது. அதற்கு பிறகு தர வரிசையின்படி முறையே சுவிட்சர்லாந்து, ஃபின்லாந்து, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், ஃபிரான்ஸ், ஜெர்மனி, டிரினிடேட், பெல்ஜியம், கனடா ஆகிய நாடுகள் உள்ளன. இங்கிலாந்து முதலிடத்தில் வந்த பிறகும் கூட தனி நபர் விகிதாச்சாரப்படி சந்தா செலுத்துவதன் அடிப்படையில் அது மிகவும் பின்னால் சென்று விட்டது.

அல்லாஹ்வின் அருளால் இந்த வருடத்தில் வக்ஃபே ஜதீதில் 13 இலட்சத்து 40 ஆயிரம் பேர்கள் சந்தா கொடுப்பவர்களில் இணைந்துள்ளனர். கடந்த வருடத்தை விட ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பேர் அதிகமாக இவ்வருடம் இணைந்துள்ளனர். பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குவதன் கனடா, இந்தியா மற்றும் இங்கிலாந்தை தவிர ஆப்பிரிக்காவில் கினிகனாக்கரி, கேமரூன், கேம்பியா, செனிகால், பெனின், நைஜர், கோங்கோசினிஸாஸா, புர்கினோஃபாஸோ மற்றும் தன்ஸானியா ஆகிய நாடுகள் அதிகமான பணிகளைச் செய்துள்ளன. நைஜீரியா இந்த வருடம் முழுமையாக கவனம் செலுத்தவில்லை. அதன் காரணமாக எண்ணிக்கையின் அடிப்படையில் ஒரு பெரும் எண்ணிக்கை இத்திட்டத்தில் பங்கு பெறாமல் அங்கு வீழ்ச்சி காணப்படுகின்றது. கடந்த வருடத்திற்கேற்ப எண்ணிக்கை அதிகரித்து இருந்தால் 13 இலட்சத்திற்குப் பதிலாக இத்திட்டத்தில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கை 14 இலட்சங்களாக ஆகியிருக்கும். நைஜீரியாவிற்கே இதில் பெரும் பங்கு இருந்திருக்க வேண்டும். இதன் பொருள் என்னவென்றால், அங்கு அதிகமாக சோம்பேறித்தனம் காணப்படுகின்றது அல்லது அறிக்கை சரியாக தயாராகவில்லை அல்லது அறிக்கை பெறப்படாமல் இருக்கலாம். அங்குள்ள ஜமாஅத் சகோதரர்களின் கலப்பற்ற தன்மையை பொருத்தவரையில் ஆப்பிரிக்காவிலும் வேறு எந்த நாட்டிலும் அதில் எந்தக் குறைவும் இல்லை. சரியான முறையில் அவர்களை அணுகவில்லை. பொதுவாக செயலர்களிடம் சேம்பேறித்தனம் இருந்து வருகின்றது.

ரப்வாவிலிருந்து ஒரு நபர் எனக்கு எழுதியிருந்தார். ஒரு முஹல்லாவின் ஜமாஅத் தலைவர் அவரிடம் வந்து வக்ஃபே ஜதீதில் உங்கள் வாக்குறுதி இல்லாமல் இருக்கின்றது. மேலும் நீங்கள் எந்த தொகையும் இதற்காக செலுத்தவும் இல்லை என்று கூறினார். அதற்கு அந்த நபர் இது நடக்காத ஒரு விஷயமாகும். நான் முறையாக சந்தா செலுத்தி வருகின்றேன் என்று கூறினார். அப்போது ஜமாஅத் தலைவர் அவர்கள் இது எப்படி நிகழ்ந்து விட்டது என்றால் இந்த வருடம் எங்களது வக்ஃபே ஜதீது செயலர் எந்த அளவு சோம்பேறியாக இருந்தார் என்றால் முஹல்லாவிலுள்ள எந்தவொரு நபரிடமும் அவர் வாக்குறுதி வாங்காமலேயே இருந்து விட்டார். அவ்வாறே சரியான முறையில் தொகை வசூல் செய்யப்படவில்லை என்று கூறினார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப் -பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

ஜலாலுத்தீன்
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

இதிலிருந்து சில நேரங்களில் செயலர்களின் சோம்பேறித்தனம் காரணமாக மக்கள் பேரிழந்தவர்களாக ஆகி விடுகின்றனர் என்பது தெரிய வருகின்றது. இதே நிலைதான் நைஜீரியாவிலும் ஏற்பட்டிருக்கும் என்று எனக்கு தோன்றுகிறது. இதை தவிர அமெரிக்காவிலும் எண்ணிக்கை குறைந்திருக்கின்றது. ஆனால் அங்கு குறைவு ஏற்படுவதற்கான எந்தவொரு ஆகுமான காரணமும் இருக்க முடியாது. நைஜீரியாவிலும் ஆகுமான எந்தவொரு காரணமும் இருக்க முடியாது. அவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று தனி நபர் விகிதாச்சாரப்படி சந்தா செலுத்துவதில் அமெரிக்கா மிகவும் அதிகமான அதிகரிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது – மாஷா அல்லாஹ். தனி நபர் சந்தா செலுத்துவதில் அது முதலிடத்தில் இருக்கின்றது. இவ்வாறே மற்ற எல்லா நாடுகளும் இத்திட்டத்தில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தமது பலவீனங்களை அவர்கள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். மக்களிடம் பலவீனம் இல்லை. பணி செய்பவர்களிடம் பலவீனம் இருக்கின்றது.

சந்தா பாலிகான் அதாவது பருவ வயதை அடைந்தவர்கள் சந்தா செலுத்துகிற ஒரு துறையும் வக்ஃபே ஜதீதில் இருக்கின்றது. இதில் பாகிஸ்தானிலுள்ள ஜமாஅத்துகளில் தர வரிசையின் அடிப்படையில் முதலிடத்தில் லாஹூரும் அதற்கு அடுத்த இடத்தில் ரப்வாவும் அதற்கு அடுத்த இடத்தில் கராச்சியும் இருக்கின்றது. இதை தவிர அடுத்த இடங்களில் இஸ்லாமாபாத், குஜ்ரான்வாலா, குஜராத், முல்தான், ஹைதராபாத், பெஷாவர், மீர்பூர் ஹாஸ், உகாடா, டேராகாஸிகான் ஆகிய ஜமாஅத்துகள் உள்ளன.

அத்ஃபால் அலுவலகம் உள்ளது. சிறுவர்களின் தியாகம் அதில் தெரிய வருகின்றது. இதில் லாஹூர் முதலிடத்திலும் அதற்கு அடுத்த இடத்தில் ரப்வாவும், அதற்கு அடுத்த இடத்தில் கராச்சியும் வருகின்றது. இதற்குப் பிறகு ஸியால்கோட், ராவல்பிண்டி, குஜ்ரான்வாலா, குஜராத், ஹைதராபாத், டேரா காஸிகான், கோட்லி, ஆஸாது காஷ்மீர், மீர்பூர்ஹாஸ், முல்தான் மற்றும் பாவல்நகர் ஆகியவை வருகின்றன.

ஒட்டுமொத்த வசூலின்படி தர வரிசையின் அடிப்படையில் இங்கிலாந்தில் முறையே முதல் பத்து இடங்களில் உள்ள ஜமாஅத்துகள் இதுவாகும்: Woosterpark, Masjid Fazl, Bermingum South, Patney, Reinspark, Braidfort, New Mordern, Glaxo, Bermingum West, Siningum ஆகிய ஜமாஅத்துகள் வருகின்றன.

ஒட்டுமொத்த வசூலின்படி தர வரிசையின் அடிப்படையில் முன்னணியிலுள்ள மண்டலங்களின் வரிசைகள் முறையே, London B, London A, Midland, North East, South ஆகியவையாகும்.

வசூலின் அடிப்படையில் முன்னணியிலுள்ள ஜெர்மனியின் ஐந்து உள்ளூர் அமாரத்துகள் முறையே Humburg, Frankfort, Whisburdern, Modfelden, Holden Ditsenburg ஆகியவை வருகின்றன.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் ஜெர்மனியின் முதல் பத்து ஜமாஅத்துகள் முறையே Reidenmark, Nouis, Fedburg, Nidda, Flayingshaim, Hanannov, Colon, Combons, Longon, Mahdiabad ஆகியவை வருகின்றன.

தர வரிசையின் அடிப்படையில் முதல் பத்து இடத்தை வகிக்கின்ற அமெரிக்காவிலுள்ள ஜமாஅத்துகள் முறையே Sillicon Valley, Cieotoll, Detroit, Silver Spring, Central Verginia, Los Angles East, Delles, Boasten, Fedelfia, Lorret ஆகியவை வருகின்றன.

கனடாவில் முதல் ஐந்து இடங்களிலுள்ள அமாரத்துகள் முறையே Calgery, Peace Village, Woan, Fenkuver, Vessaga ஆகிய ஜமாஅத்துகளாகும்.

முதல் ஐந்து இடத்திலுள்ள பெரிய ஜமாஅத்துகள் முறையே Derhem, Milton East, Siscotown South, Siscotown North, Wenoster, Lidemister, Ottawa West, Ottawa East, Berry, Regina ஆகியவையாகும்.

ஜெர்மனியில் அத்ஃபால் அலுவலகத்தில் முதல் ஐந்து இடங்களில் உள்ள ஜமாஅத்துகள் முறையே Derhem, Bredfort, Siscotown South, Lide Minister ஆகியவையாகும். மண்டலங்களின் தர வரிசைகள் முறையே Calgery, Peace Village, Bromten, Voan Westen ஆகியவை உள்ளன.

இந்தியாவில் தரவரிசையில் அடிப்படையில் உள்ள மாநிலங்கள் இவையாகும்: முதல் இடத்தில் கேரளாவும், இரண்டாவது இடத்தில் ஜம்மு காஷ்மீர் அதற்கு அடுத்த இடங்களில் தமிழ்நாடு, கர்நாடகா, தெலுங்கானா, ஒடிசா, பெங்காள், பஞ்சாப், உத்திரப்பிரதேசம், தில்லி, மஹாராஸ்டிரா ஆகியன உள்ளன.

தரவரிசையின் அடிப்படையில் முதல் பத்து இடங்களின் இந்திய ஜமாஅத்துகள்: முதல் இடத்தில் கருளாயி பிறகு கோழிக்கோடு, ஹைதராபாத்,

O.A.N. DOORS & STEELS
O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்
*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*
Ambai Road, (Opp. Karuna Clinic),
Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

பத்தப்பிரியம், காதியான், கண்ணூர் டவுண், கொல்கத்தா, பெங்களூரு, சூளூர் மற்றும் பயங்காடி ஆகியனவாகும்.

ஆஸ்திரலியாவிலுள்ள ஜமாஅத்துகள் முறையே Causerhill, Brispen, Lugan, Master Paric, Pevrik, Pejith, பிறகு Adled South, Lamton, Cambro Hungawaran, Adled West ஆகியவை உள்ளன.

அல்லாஹ் தியாகங்கள் செய்த அனைவரது செல்வத்திலும் உயிர்களிலும் அளவற்ற அருள்களை வழங்குவானாக! எதிர்காலத்தில் இத்துறையுடன் தொடர்புடைய பொறுப்பாளர்களையும் இறைவன் துடிப்புடன் செயல்பட வைப்பானாக! அவர்களை சரியான முறையின் தனது பணிகளைச் செய்ய வைப்பானாக! குறைகளை நிறைவு செய்ய அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக இத்திட்டத்தில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பது சரிதான். ஆனால், ஒவ்வொருவரையும் இதில் பங்கு பெற வைப்பது அவசியமானதாகும். அவர்கள் குறைவான தொகையைச் செலுத்தி இத்திட்டத்தில் பங்கு பெற்றாலும் சரியே ஆகும்.

இப்போது நான் தொழுகைகளுக்குப் பிறகு இரண்டு பேர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதல் ஜனாஸா மதிப்பிற்குரிய அஸ்மா தாஹிரா உடையதாகும். இவர்கள் மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா மிர்ஸா கலீல் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் தேதி தமது 79 –வது வயதில் கனடாவில் இவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். 1935 –ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பாகல்பூரில் இவர்கள் பிறந்தார்கள். இவர்களது தந்தையார் பெயர் மவ்லவி அப்துல் பாக்கி சாஹிப் ஆகும். தாயார் பெயர் ஸபிய்யா ஹாத்தூன் சாஹிபா ஆகும். இவர்களது தந்தையார் ஒரு நீண்ட காலம் கூங்க்ரி ஜமாஅத்தின் தலைவராக தொண்டாற்றியுள்ளார்கள். இவர்களது தாத்தாவான ஹஸ்ரத் அலி அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்திருந்தார்கள்.

அவர்கள் பைஅத் செய்த சம்பவம் பற்றி மதிப்பிற்குரிய அமத்துன் நூர் சாஹிபா அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: நாங்கள் இது தொடர்பான சம்பவத்தைக் கேள்விப்பட்டுள்ளோம். அவர்கள் காதியான் வந்த சமயத்தில் ஒன்பதாவது வகுப்பில் படித்து வந்தார்கள். காதியான் செல்லும் வழியில் அமிர்தசரஸ் இரயில் நிலையத்தில் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அவர்கள் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் அலி அஹ்மது சாஹிப் இவர்கள் மவ்லவி சாஹிபிற்கு இவ்வாறு பதில் கூறினார்கள். எனது தாயார் சூரிய சந்திர கிரகணங்கள் தோன்றும் அடையாளம் நிறைவேறிய பிறகு இது பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்காக என்னை காதியான் அனுப்பி வைத்தார்கள். உங்களது இந்த செயலால் மிர்ஸா சாஹிப் அவர்களின் உண்மை எனக்கு தெளிவாக தெரிந்து விட்டது. உங்களைப் போன்ற பெரிய மவ்லவிகள் பொய்யான முறையில் வாதம் செய்துள்ள ஒரு நபருக்காக ஏன் இவ்வளவு அதிகமான நேரத்தை வீணாக்க வேண்டும்? நீங்கள் இவ்வாறு சுற்றித் திரிவதும் நேரத்தை வீணாகக் கழிப்பதும் மிர்ஸா சாஹிப் அவர்கள் உண்மையாளர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது என்று அன்னார் பதில் கூறினார்கள்.

1964 ஆம் ஆண்டு ஜனவர் 6 ஆம் தேதி அஸ்மா தாஹிரா சாஹிபா அவர்களின் திருமணம் மிர்ஸா கலீல் அஹ்மது சாஹிபுடன் நடந்தது. மிர்ஸா கலீல் அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மகனாவார்கள். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் தாய்வழிப் பேரன் ஆவார்கள். அவர்கள் சாஹிப் ஸாதி அமத்துல் ஹை சாஹிபா அவர்களுக்கு மகனாக பிறந்தார்கள். மதிப்பிற்குரிய அஸ்மா தாஹிரா சாஹிபா அவர்களுக்கு தலைமையக லஜ்னா இமாயில்லாஹ்வின் பொதுச் செயலாளர் ஆகவும், தலைமையக லஜ்னா இமாயில்லாஹ்வின் விருந்தினர் செயலராகவும், உலகளாவிய தப்லீக் திட்டக் குழுவின் உறுப்பினராகவும், அவ்வாறே உள்ளூர் லஜ்னாவிலும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது.

அஸ்மா தாஹிரா சாஹிபா அவர்களின் தந்தையார் 1975 ஆம் ஆண்டு வஃபாத் ஆனார்கள். அதற்கு பிறது இவர்களது தாயார் இவர்களுடன் இருந்து வந்தார்கள். அவர்கள் எனது மாமியாக இருந்ததால் மாமனார் வீட்டில் தனது நாத்தனார்களுடனும் உறவினர்களுடனும் இவர்களுக்கு நெருக்கமானவர் –களுடனும் மிகவும் நேசமிக்க தொடர்பு இவர்களுக்கு இருந்ததைப் பற்றி எனக்கு தெரியும். இவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த சமயத்தில் நான் கனடா சென்ற சமயத்தில் இவர்களைச் சந்தித்தேன். அவர்களால் அப்போது அசையக் கூட முடியவில்லை. ஆனால், அவர்களிடம் எந்த அளவு பணிவு இருந்ததென்றால் எனது ஆடைகளை வெளியில் எடுத்து வையுங்கள். நான் தயாராக இருக்க வேண்டும். ஒருவேளை எனக்கு அழைப்பு வந்தால் என்னை சந்திக்கச் செல்ல வேண்டும் என்று அவர்கள் வீட்டில் உள்ளவர்களிடம் கூறியிருந்தார்கள். என்னைச் சந்திப்பதற்காக வாருங்கள் என்று என்னிடம் கூறுவதற்குப் பகரமாக ஒருவேளை நான் அவர்களைச் சந்திப்பதற்காக அழைக்கலாம் என்று அவர்கள் நினைத்தார்கள். நான் அவர்களைச் சந்தித்து விட்டு வந்ததன் காரணமாக அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. இவர்களுக்கு எந்த சந்ததியும் இல்லை. இவர்களது சகோதரியின் ஒரு மகளை இவர்கள் வளர்த்து வந்தார்கள். 5 வயதில் இந்த மகள் அவர்களிடம் வந்தார்கள். தனது குழந்தைகளைப் போன்று அவர்கள் என்னை வளர்த்தார்கள் என்று அவர் கூறுகின்றார். அந்த வளர்ப்பு மகளின் திருமணத்தின்போது அவருக்கு தேவையான எல்லா விஷயங்களையும் நிறைவேற்றினார்கள். அவருக்கு தர்ப்பிய்யத் வழங்குவதிலும் எந்தக் குறையும் அவர்கள் வைக்க வில்லை.

அவர் கூறுகின்றார்: நான் கவலைப்படும்போது என்னிடம் துஆ செய்யுமாறு அவர்கள் கூறுவார்கள். நீங்கள் துஆ செய்யுங்கள். பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைத்து விடும் என்று கூறுவார்கள். துஆக்கள் செய்வதில் மிகுதியான நம்பிக்கை அவருக்கு இருந்தது. அந்த மகள் மீது அவருக்கு மிகுந்த அன்பு இருந்தது. அவருக்கு தர்ப்பிய்யத் வழங்குவதில் அவர்கள் குறிப்பாக கவனம் செலுத்தி வந்தார்கள். உனது பிள்ளைகளைப் பள்ளிவாயிலுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். பள்ளிவாயில்களுடன் அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தால்தான் அவர்கள் ஒருபோதும் வீணாகாமல் இருப்பார்கள் என்று கூறி வந்தார்கள். ஜமாஅத்துடன் தொடர்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று எப்போதும் அவர்கள் போதனை செய்து வந்தார்கள்.

இந்த மகள் கூறுகின்றார்கள்: நான் வஸிய்யத் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் அறிவுரை கூறினார்கள். தனக்கு கீழே பணி புரிபவர்களுடன் எப்போதும் மென்மையாக நடந்து கொள்வார்கள். வீட்டில் ஒரு வேலை செய்யும் பெண் இருந்து வந்தார். அவர் தொடர்பாக தமது வளர்ப்பு மகளிடம் எனக்கு பிறகு இவரை நீங்கள் கவனித்து கொள்ள வேண்டும். வீட்டில் அவருக்கு நான் தந்துள்ள குவார்டஸில் இருந்து அவரை வெளியேற்றி விடக் கூடாது என்று கூறினார்கள். அல்லாஹ் இவர்களை மன்னித்து இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக!

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய சவுத்ரி ஹமீது நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் உடையதாகும். இவர்கள் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் தேதி தமது 83 –வது வயதில் லாஹூரில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

சவுத்ரி ஹமீது நஸ்ருல்லாஹ் கான் சாஹிபின் தாத்தாவான ஹஸ்ரத் சவுத்ரி நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். சவுத்ரி ஃபதஹ் முஹம்மது சியால் சாஹிப் அவர்கள் அன்னாரது பாட்டனார் ஆவார்கள். இவர்களும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். இவர்களது தந்தையாரான சவுத்ரி முஹம்மது அப்துல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் நீண்ட காலம் வரை கராச்சி ஜமாஅத்தின் அமீராக இருந்து வந்தார்கள். சவுத்ரி ஸபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் இவர்களது பெரிய தந்தையும் மாமனாரும் ஆவார்கள். 1964 –ல் ஹமீது நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் அவர்களின் திருமணம் சவுத்ரி ஸபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களின் மகளான அமத்துல் ஹை சாஹிபா அவர்களுடன் நடைபெற்றது. இவர்களது சந்ததிகளாக முஸ்தஃபா நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் அவர்களும் இப்ராஹீம் நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் அவர்களும் இருந்தனர். இப்ராஹீம் நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் தனது 16 –வது வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். ஆயிஷா நஸ்ருல்லாஹ் என்ற ஒரு மகளும் இவருக்கு இருக்கின்றார். சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களது மகளுக்கு இவர்களுடன் திருமணம் நடப்பதற்கு முன்னதாக டாக்டர் இஃஜாஸுல் ஹக் சாஹிபுடன் திருமணம் நடந்திருந்தது. அவர்கள் மூலமாக இவர்களுக்கு முஹம்மது ஃபஸ்லுல் ஹக் மற்றும் அஹ்மது நஸ்ருல்லாஹ் என்ற இரு மகன்கள் பிறந்தனர். 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி அஹ்மது நஸ்ருல்லாஹ் அவர்களை லாஹூரில் எதிரிகள் ஷஹீதாக்கி விட்டனர். எதிரிகள் அவர்களை ஷஹீதாக்கி விட்டனர். இப்போது இவர்களது இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். தனது மனைவியின் முந்தைய கணவருக்கு பிறந்த பிள்ளைகளையும் மிகுந்த நேசத்துடன் இவர்கள் தன்னுடன் வைத்து கொண்டார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபதுல் மஸீஹ் இவர்களை 1975 –ல் லாஹூர் ஜமாஅத்தின் அமீராக நியமித்தார்கள். 34 வருடங்களாக இவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் லாஹூரின் அமீர் பொறுப்பில் இருந்து வந்தார்கள். 2009 –ல் இவர்களுக்கு அதிகமாக உடல் நலக்குறைவு ஏற்பட்டபோது நான் இந்த பணியை உங்களால் செய்ய முடியுமா என்று பார்த்து கொள்ளுங்கள் என்று கூறியதும் நல்லது. நான் இந்த பணியை செய்வதிலிருந்து விலகி விடுகின்றேன் என்று அவர்கள் கூறினார்கள். அமீரின் பணி மிகவும் விரிவான பணியாகும். அவர்களது உடல்நலம் இதற்கு அனுமதி தராததால்தான் அவர்கள் இந்த தொண்டிலிருந்து விலகினார்கள். அதற்கு பிறகு புதிய அமீர் அங்கு நியமிக்கப்பட்டார். புதிய அமீரான ஷேக் முனீர் அஹ்மது சாஹிப் அவர்கள் 2010 ஆம் ஆண்டில்

**சுத்தமான தேன் கிடைக்கும்**

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**

B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)

Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284

**திருக்குர்ஆனிலிருந்து**

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**

வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 9 February 2017 Issue No. 6

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

ஷஹீதாக்கப்பட்டார்கள். ஏறக்குறைய 2008 அல்லது 2009 ஆம் ஆண்டு வரை இவர்கள் அமீராக இருந்து வந்தார்கள். 1974 –ல் எதிர்ப்பான நிலைமைகள் இருந்த நேசரத்தில் அவர்கள் அமீராக இல்லாமல் இருந்தபோது கூட ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பல பொறுப்புகளையும் இவர்களிடம் ஒப்படைத்திருந்தார்கள். அவற்றை சிறப்பான முறையில் அன்னார் நிறைவேற்றினார்கள். 1974 –ல் உயர்நீதிமன்றத்தில் Justice Samdani அவர்களின் Enquiry Commission நியமிக்கப்பட்ட நேரத்தில் அதிலும் கூட அவர்கள் பெருமளவில் தொண்டாற்றி இருந்தார்கள். 1974 –ல் சோதனையின் காலக்கட்டத்தில் ஷரீஅத் நீதிமன்றமான லாஹூர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற நேரத்திலும் கூட அங்கு அவர்கள் பெரும் தொண்டு புரிந்து வந்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பாகிஸ்தானிலிருந்து இலண்டனுக்கு ஹிஜ்ரத் செய்த நேரத்தில் அவர்கள் ரப்வாவிலிருந்து இலண்டன் வரை ஹுஸூர் ரஹிமஹுல்லாஹ்வுடன் இருந்தார்கள் என்ற பெருமை அவர்களைச் சார்ந்ததாகும். எனது அறிவிற்கேற்ப அப்போது ரப்வாவிலிருந்து கராச்சி வரை ஹுஸூர் அவர்களின் காரை ஓட்டியவர்களும் இவர்களே ஆவார்கள். இவர்கள் அமீராக இருந்த காலக்கட்டத்தில் லாஹூரிலுள்ள தாருஸ் ஸிக்ரின் விரிவாக்கப் பணிகள் நடந்தன. அந்தப் பணி இப்போது வரை நடந்து கொண்டிருக்கின்றது. அதிகமான பணிகள் அப்போது நடந்தன. இவர்கள் அமீராக இருந்த காலக்கட்டத்தில் லாஹூரில் பல அழகிய பள்ளிவாயில்கள் கட்டப்பட்டன. இவர்களது காலக்கட்டத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் லாஹூருக்கு சிறந்த முறையில் பொருள் தியாகங்கள் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. கடந்த 32 வருடங்களாக இவர்கள் Fazle Umar Foundation –ன் தலைவராகவும் தொண்டாற்றி வந்தார்கள். 1984 –ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பாகிஸ்தானிலிருந்து இங்கிலாந்திற்கு ஹிஜ்ரத் செய்த நேரத்தில் நான் ஏற்கனவே கூறியதுபோன்ற ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் உடன் இருக்கின்ற நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. Ian Adamsun எழுதிய நூலில் இவர்களைப் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார்.

லாஹூரின் உமூரே ஆமா செயலரான சவுத்ரி முனவ்வர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹமீது நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் தன்னுடன் வேலை செய்கின்ற பணியாளர்களை மிகவும் அதிகமாக கருத்தில் கொள்வார்கள். அவர்களது சிறு சிறு தேவைகளையும் கவனித்து அவற்றை நிறைவேற்றுவார்கள். அவர்களிடம் ஏதாவது ஆலோசனை கேட்கப்பட்டால் மிகுந்த அன்புடனும் நேசத்துடனும் அவர்கள் ஆலோசனை கூறுவார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் 9 வருடங்களாக லாஹூர் மாவட்டத்தில் காயித் ஆக இருந்திருக்கின்றேன். அவர்கள் எந்த விஷயத்திலும் வெறுப்பை வெளிப்படுத்தியதில்லை. குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பணிகளில் மிகவும் அதிகமாக ஒத்துழைப்பு வழங்கி வந்தார்கள். லாஹூருக்கு வெளியே குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஐந்து இஜ்திமாக்களை நடத்துவதற்கான சந்தர்ப்பம் எங்களுக்கு கிடைத்தது. அப்போது அன்னார் எங்களுக்கு சிறந்த முறையில் வழிகாட்டல்களை வழங்கினார்கள். ஒவ்வொரு விஷயம் தொடர்பாகவும் அவர்கள் எங்களுக்கு வழிகாட்டல்களை வழங்கினார்கள். சவுத்ரி ஹமீது நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் ஒரு சிறந்த நிர்வாகியும் ஆவார்கள். பணியை சரியான சந்தர்ப்பத்திலும் பொருத்தமான இடத்திலும் செய்பவர்களாக அவர்கள் இருந்தார்கள். ஜமாஅத்துகளுக்கு அவர்கள் சுற்றுப் பயணங்களை மேற்கொள்வார்கள். ஹல்காவின் தலைவர்களுடன் அவர்களுக்கு சொந்த தொடர்பு இருந்து வந்தது. செயற்குழு உறுப்பினர்களை தமது நண்பர்களாகவும் உதவி செய்யும் கையாகவும் அவர்கள் கருதி வந்தார்கள்.

ஹகீம் தாரிக் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டு நடக்கின்ற உணர்வு அவர்களிடம் அதிகமாக இருந்தது. ஜமாஅத் பணியாளர்களுடன் மிகுந்த பரிவுடனும் அன்புடனும் அவர்கள் நடந்து கொண்டார்கள். அவர்கள் மீது அதிகமாக நம்பிக்கை வைப்பார்கள். அவர்களுக்கு அதிகமாக மதிப்பளித்து வந்தார்கள். என்னுடன் எவ்வளவு காலம் இவர்கள் பணியாற்றினார்களோ அப்போதும் நான் நாஸிர் அஃலாவாக இருந்த போதும் முழுமையாக ஒத்துழைத்து முழுமையாக கட்டுப்பட்டு நடந்து தமது பணிகளைச் செய்து வந்தார்கள். கிலாஃபத் பதவியில் நான் அமர்ந்த பிறகும் எதுவரை இவர்கள் லாஹூர் ஜமாஅத்தின் அமீராக இருந்தார்களோ அதுவரை முழுமையாக அவர்கள் பணிகளில் ஒத்துழைப்பு தந்தார்கள். கட்டுப்பட்டு நடக்கின்ற உணர்வு இவர்களிடம் மிகுதியாக இருந்தது.

லாஹூர் மாவட்டத்திலுள்ள துணை அமீராக கர்னல் நயீம் ஸித்தீக்கி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: கிலாஃபத்தோடு தனக்கு இருந்த தொடர்பு பற்றிய சம்பவங்களை அவர்கள் கூற ஆரம்பித்து விட்டால் பிறகு தொடர்ந்து அதைப் பற்றியே கூறிக் கொண்டே இருப்பார்கள். கர்னல் நஹீம் சாஹிப் அவர்கள் இவர்களை பற்றிய ஒரு சம்பவத்தை எழுதியுள்ளார்கள். சவுத்ரி சாஹிப் அவர்கள் தமது பணி நிமித்தமாக பாகல்பூர் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது வழியில் அவர்கள் ரப்வா வந்து சேரும்படி ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் தூதுச் செய்தி அவர்களுக்கு கிடைத்தது. பாகல்பூர் சென்று சேர்ந்த பிறகு தமது பணியை விட்டு விட்டு உடனடியாக அவர்கள் ரப்வாவிற்கு வந்து விட்டார்கள். இரவோடு இரவாக சுபுஹ் தொழுகைக்கு முன்னதாக அவர்கள் ரப்வா வந்து சேர்ந்து வெளியில் உலாவிக் கொண்டிருந்தார்கள். அது தஹஜ்ஜுத்திற்கும் சுபுஹ் தொழுகைக்கும் இடையிலுள்ள அந்த நேரமாக இருந்தது. அப்போது நான் வந்து சேர்ந்து விட்டேன் என்ற செய்தியை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு தெரிவிப்பதற்காக தனது தூதுச் செய்தியை அனுப்பினார்கள்.

ஏழைகளுக்காக உதவித் தொகையை அவர்கள் வழங்கி வந்தார்கள். தனது பெயரில் மட்டுமல்லாமல் தனது மனைவி தனது தந்தையார் மற்றும் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் ஆகியோரின் பெயரில் இந்த உதவித் தொகையை அவர்கள் வழங்கி வந்தார்கள். எவரிடமிருந்து விண்ணப்பம் வந்தாலும் அவருக்கு எனது பதிவேட்டிலிருந்து அல்லது எனது மனைவியின் பதிவேட்டிலிருந்து அல்லது சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபின் பதிவேட்டிலிருந்து உதவித்தொகை வழங்க ஏற்பாடு செய்யுமாறு அவர்கள் அந்த விண்ணப்பத்தில் மார்க் செய்வார்கள். ஹமீது நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் லாஹூர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மனிதராக இருந்தார்கள் என்று இவர்கள் சரியான விஷயத்தையே எழுதியுள்ளார்கள். எந்நிலையிலும் இறைவன் தரப்பிலிருந்து இவர்களுக்கு தலைமையேற்று ஒரு விஷயத்தை செய்கின்ற தகுதியும் வழங்கப்பட்டிருந்தது.

ஷம்ஸ் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இவர்கள் கடந்த 32 வருடங்களாக Fazle Umar Foundation –ன் தலைவராக இருந்து வந்தார்கள். Fazle Umar Foundation –ன் தலைவராக சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களின் மறைவிற்குப் பிறகு 1986 –ல் இவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் மரணமடையும் வரை ஏறக்குறைய 32 வருடங்கள் அதன் தலைவராக தொண்டு செய்யும் நல்வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. மிகவும் அனுதாப உணர்வுள்ள மென்மையாக நடந்து கொள்கின்ற பரிவுடன் நடந்து கொள்கின்ற அன்பு செலுத்தும் மனிதராக அவர்கள் இருந்தார்கள். அவர்களது தொடர்புகளின் வட்டம் மிகவும் விரிவாக இருந்தது. இந்த தொடர்புகளை எப்போதும் ஜமாஅத்தின் பயனுக்காக அவர்கள் பயன்படுத்தி வந்தார்கள். மிகவும் தூய உள்ளம் கொண்ட அப்பணிக்கும் மனம் கொண்ட ஜமாஅத்தின் தொண்டராகவும் கலீஃபாக்களின் சிறந்த உதவியாளராகவும் கிலாஃபத்திற்காக மிகுந்த தன்மான உணர்வுள்ள நன்றியுணர்வுள்ள மனிதராக அவர்கள் இருந்தார்கள். பலவீனமாக அவர்கள் இருந்தும் கூட Foundation –ன் கூட்டங்களில் அவர்கள் கலந்து கொள்வார்கள். தனது மிகச் சிறந்த ஆலோசனைகளை வழங்கபவராகவும் விவகாரங்களை நன்கு புரிந்து கொள்பவர்களாகவும் அன்னார் இருந்தார்கள். விவகாரத்தின் ஆழம் வரை சென்று அனைவரிடமும் ஆலோசனை கேட்டு அவர்கள் முடிவெடுப்பார்கள்.

மிர்ஸா நதீம் சாஹிப் கூறுகின்றார்கள்: அவர்கள் சுயமே என்னிடம் இவ்வாறு கூறினார்கள். 1975 –ல் அவர்கள் ஜமாஅத்தின் அமீர் ஆக நியமிக்கப்பட்டபோது மிகவும் பதற்றத்துடன் ரப்வாவிற்குச் சென்று ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் சென்று தான் அவர்களை சந்திக்க வேண்டும் என்று அவர்களுக்கு தூதுச் செய்தி அனுப்பினார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவர்களை அழைத்து நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்? என்ன காரணம்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் நான் இந்தப் பதவிக்கு தகுதியானவன் அல்ல என்று கூறினார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இப்போது உணவிற்கான நேரமாக இருக்கின்றது. முதலில் சாப்பிடுங்கள் என்று கூறினார்கள். சவுத்ரி சாஹிப் அப்போதும் தான் கூறியதையே திரும்பத் திரும்ப கூறிக் கொண்டேயிருந்தார்கள்.

பிறகு அவர்களே கூறுகின்றார்கள்: அதற்குப் பிறகு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எனது தோளின் மீது கை வைத்து உங்களை காலத்தின் கலீஃபா அமீராக ஆக்கியிருக்கின்றார்கள். எது சிறந்தது என்பதை இறைவனின் கலீஃபா நன்கு அறிந்தவராக இருக்கின்றார் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அதற்குப் பிறகு மிகவும் கடினமான நிலைமைகள் எனக்கு வந்தன. ஆனால், அல்லாஹ்வின் அருளால் நான் ஒருபோதும் பதற்றம் அடையவில்லை. கிலாஃபத்தின் துஆவின் காரணமாக எனது எல்லா பணிகளும் நடந்தன.

அல்லாஹ் இவர்களை மன்னித்து இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களது தகுதிகளை உயர்த்துவானாக! இவர்களது சந்ததிகளையும் நன்றியுணர்வுடன் கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடனும் தொடர்புள்ளவர்களாக அவன் வைப்பானாக! இவர்கள் செய்த நன்மைகளைத் தொடர்ந்து செய்வதற்கான நல்வாய்ப்பினை அவர்களுக்கு வழங்குவானாக!

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad